Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

இலவச கணினிப் பயிற்சிநெறி - 2003

2002 CHILDREN'S PROGRAM

O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி

ஆரம்பம்:- 28-12-2002 } 3.00 மணிக்கு
05-03-2003 }

JAFFNA TECHNICAL INSTITUTE

No.07, Palaly Road, Jaffna.
(இலுப்பையடிச் சந்திக்கருகில்) (சி-254)

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 12 (17.12.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 77

# புனர்வாழ்வுப் பணிகள் மிகவிரைவில் ஆரம்பம்!



## பாதுகாப்பு வலயங்களை விலக்குக சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்து!

(கிளிநொச்சி)

**உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினர் வெளியேறித் தமிழ்மக்கள் மீளக்குடியமர்வதற்கு உரிய சூழ்நிலையை ஏற்படுத்தித்தர வேண்டும். அப்பொழுதுதான், புனர்வாழ்வு-புனரமைப்புப் பற்றிய முக்கிய தீர்மானங்களை உரியமுறையில் அமுலாக்க முடியும். மிகவிரைவில் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் ஆரம்பமாகவுள்ளதால் சுமுகநிலை உடன் ஏற்படுத்தப் படவேண்டுமென அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்தியுள்ளார்.**

கிளிநொச்சியில், வடக்கு - கிழக்கின் அவசர மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகள் தொடர்பான உபகுழுவின் கூட்டத்தின் முடிவில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது - சர்வதேச நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கில் அத்தியாவசிய புனர்வாழ்வுச் செயற்திட்டங்கள் மிக விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்விடயம் தொடர்பாக இரண்டு நாட்களாக நடைபெற்ற அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுக் குழுக்கூட்டத்தில் ஆக்கபூர்வமான வகையில் இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளன என்றார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் ஆரம்பித்த இவ் உபகுழுவின் கூட்டம் இரவு 9 மணிவரை தொடர்ந்தது. பின் நேற்றுக்காலை 9 மணியளவில் ஆரம்பித்த உபகுழுவின் கூட்டம் தொடர்ந்து நண்பகல் 2.30 மணிவரை நீடித்தது. (10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



தெய்வங்கள் வரம் குடுத்தாலும் பூசாரிகள் இடம் விடவெல்லே பிடிவாதம் பிடிக்கினம்...

## லொறி புரண்டதில் போக்குவரத்து பாதிப்பு!

(ஆனையிறவு)

நேற்றைய தினம் ஏ-9 வீதியூடான போக்குவரத்து ஆனையிறவுக்கு அண்மையில் பல மணிநேரம் தடைப்பட்டது.

மேற்படி பகுதியில் பழைய இரும்புகளை ஏற்றிச் சென்ற லொறியொன்று மதகினுள் புதையுண்டதைத் தொடர்ந்து முற்பகல் 12 மணி முதல் மாலைவரை மேற்படி பாதையூடான (10ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழ மீட்பு நிதிக் கடன்மீளல்

தமிழீழ மீட்பு நிதிக் கடன் திட்டத்தின் கீழ் கடன்கொடுத்தவர்களில் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மேலும் 2,400 பேரின் கடன் இம்மாதம் மீளளிக்கப்படவுள்ளது.

☞ விபரம் உள்ளே...

### மாவட்டந்தோறும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு

## புலிகள் - அரசு தரப்பில் தலா இரு உறுப்பினர்கள்

(கிளிநொச்சி)

மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மாவட்டந்தோறும் ஒவ்வொரு குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இக்குழுவில் புலிகளின் இரு பிரதிநிதிகளும் அம்மாவட்ட அரச அதிபரும் மற்றுமோர் அரச பிரதிநிதியும் என நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். இவர்கள் அந்தந்த மாவட்டங்களுக்குரிய தேவைகளை இனங்கண்டு அறிக்கை தயாரிப்பர்.

அதேபோன்று, கிளிநொச்சியில் அமைப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான செயலகத்தின் மூலமாக மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்திட்டங்களுக்காக, மாவட்டங்கள் தோறும் உதவித் திட்டப்பணிப்பாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

கிளிநொச்சியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மேற்படி செயலகத்தினால், வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் பல செயற்திட்டங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இச் செயற்திட்டங்களை இலகுவாக மேற்கொள்ளவே மேற்படி நியமனங்கள் செய்யப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகளில் மேற்படி செயலகம் ஈடுபட்டு வருகின்றது.



தமிழ்ச்செல்வனுடன் உரையாடும் திருமதி ஜோன் வெஸ்ட்போர்க்.

### ✹ மீள் குடியமர்வு ✹ பெண்கள், சிறுவர் நலன் ✹ வேலைவாய்ப்பு

## மூன்று அடிப்படை விடயங்களுக்கு அபிவிருத்திச் செயலகம் முன்னுரிமை

(கிளிநொச்சி)

"முதற்கட்டமாக மூன்று அடிப்படை விடயங்களில் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான செயலகம் கவனம் செலுத்தவுள்ளது. இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது, யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் தொடர்பான புனர்வாழ்வு நடவடிக்கைகள், யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வர்களுக்கான சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய விடயங்களிலேயே உடனடி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது." இவ்வாறு - கிளிநொச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் வட - கிழக்கு உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கான செயலகப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் நிறைவடைந்த, வடக்கு - கிழக்கில் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு, உபகுழுவின் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

"எமது செயலகத்தின் செயற்பாடுகள் வழமையானதொரு அரச செயலகத்தின் செயற்பாடு போன்று இருக்க இயலாது. குறுகிய காலத்தில் பாரிய வேலைத் திட்டங்களை (10ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் முஸ்லிம் குடியேற்றம் புலிகள் இணக்கம் தெரிவிப்பு!

### பிரதிப் பணிப்பாளர் பளீல் கூறுகிறார்

(கிளிநொச்சி)

"வடபகுதி முஸ்லிம்களின் மீள் குடியேற்றங்களை மேறகொள்வதற்கு விடுதலைப் புலிகள் தரப்பினர் இணங்கியுள்ளனர்." இவ்வாறு வடக்கு - கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுச் செயலகத்தின் பிரதிப்பணிப்பாளர் சுலைமான் லெப்பை முஹமட் பளீல் தெரிவித்தார்.

நேற்றுமாலை கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அடுத்த கட்டமாக மேற்படி மீள் குடியேற்றம் தொடர்பான திட்டங்க (10ஆம் பக்கம் பார்க்க)



ஓய்வுவேளைக் கலந்துரையாடலில் நோர்வே, புலிகள், அரச தரப்பினர்.

## சர்வதேச அமைப்புகளை உபகுழுவினர் சந்திப்பர்!

வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்புத் தேவைகளுக்கான உபகுழு- சர்வதேச தொண்டர் நிறுவனங்களையும் பொது அமைப்புக்களையும் சந்தித்துப் பேசவுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற உபகுழுவின் கூட்டத்தில் இது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்தமாதம் 20 ஆம் திகதிய (10ஆம் பக்கம் பார்க்க)





கிளிநொச்சி உபகுழுக் கூட்டத்திலிருந்து மேலும் சில படங்கள்.


கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

அழகிய நிறங்களில்
பல வகைப்பட்ட
பெயின்ற் வகைகள், கட்டடப் பொருட்கள்,
ஏனைய உபகரண வகைகள்
எதுவானாலும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2222833 Fax: 2222368


## திருட்டுக் கோஷ்டி மிரட்டல்

(நாவற்காடு)

வரணிப் பகுதிக்கு துவிச்சக்கர வண்டிகளில் வரும் விறகு வியாபாரிகள் - தனியார் காணிகளில் இருக்கும் பல பயன்தரு பச்சைமரங்களையும், பட்டமரங்களையும் தறித்து விற்பனை செய்து வருகின்றனர்.

மேலும், இவர்கள் அப்பகுதிகளல் சனநடமாட்டம் குறைந்த இடங்களில் உள்ள ஆலயங்களின் கதவுகள் மற்றும் சுவர் மணிக்கூடுகள் என்பவற்றையும் திருடுகின்றனர் எனவும், இவற்றைத் தடுக்க முற்பட்ட மக்களுக்குத் தாம் கொண்டுவரும் ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்ந்து நடைபெற்றுவருவதால் அச்சமடைந்த மக்கள் - இவை தொடர்பாக பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். (92)

## கடற்தொழிலாளர் அடையாள அட்டை விநியோகம்

(மீசாலை)

அடுத்த ஆண்டு முதல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கடற்தொழிலாளர்களுக்குமான பாஸ் நடைமுறை நீக்கப்பட்டு - கடற்தொழிலாளர் அடையாள அட்டை மட்டும் பாவிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எனவே, இதுவரை அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளாத கடற்தொழிலாளர் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னராக அவ்வப்பகுதி கடற்தொழிலாளர் சங்கத்தினூடாகத் தொடர்புகொண்டு அதனைப் பெற்றுக்கொள்ளும்படி - கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (25)

## கேபிள் தொலைபேசி புதிதாக அமைப்பு

(நவிண்டில்)

வடமராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்புப் பதிவர்த்தன நிலையத்திலிந்து புதிதாகக் கேபிள் தொலைபேசிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் பொதுமக்கள் பெரிதும் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (116)


ரவி அன் ராஜ் சில்க்ஸ்

நவநாகரிக வடிவங்களில்
மங்கள வைபவங்களுக்கு வேண்டிய
அனைத்துப் புடைவைகளையும்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.

RAVI & RAJ SILKS
77, Grand Bazaar,
Jaffna.
T.P.: 2222469


## இன்றைய நாள் இனிய நாள்

**17-12-2002 - செவ்வாய்க்கிழமை**

**சித்திரபானு வருடம், மார்கழி மீ, - 02ம் திகதி**

திதி :- அபரபட்ச திரயோதசி - இரவு - 10.55 அதன் மேல் சதுர்த்தி.

நட்சத்திரம் :- கார்த்திகை - பின்னிரவு - 3.44 வரை, அதன் மேல் ரோகினி.

விரதங்கள் :- பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம்

மேடம் :- சேமிக்கும் சிந்தனை குறைவு, நினைத்த காரியம் தடை, அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும், தேவையற்ற வாக்குவாதம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார சமநிலை.

இடபம் :- மனமகிழ்ச்சி, அறுசுவையுண்டி, பணவரவு, நண்பர்கள் உறவினர் உறவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

மிதுனம் :- தெய்வசிந்தனை, மற்றவர்களை மதியாத மனநிலை, தேவையற்ற செலவு, மிதமிஞ்சிய உணவு, தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

கர்க்கடகம் :- சமய/சமூக வையில் நற்பெயர், பணவரவு, மகிழ்ச்சி, நல்லறிவு, தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

சிங்கம் :- மக்களால் மதிக்கப்படல், பணவரவு, மனமகிழச்சி, சுற்றுலா மகிழ்வு, தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

கன்னி :- பிதாவுடன் நல்லுறவு, தெய்வ வழிபாடு, தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, தொழிற்சிறப்பு குறைவு, மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

துலாம் :- மனச்சஞ்கலம், தூரப்பயணம் தவிர்க்கவும், புதிய காரியங்களில் ஈடுபடுவது தவிர்க்கவும், தொழில் முன்னேற்றம, மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

விருச்சிகம் :- பெண்கள் மகிழ்ச்சி, மக்களால் மதிக்கப்படுதல், ஆடை ஆபரண மகிழ்வு, தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம், தேவையற்ற செலவு

தனு :- பணவரவு, கடன், எதிரி மௌனம், எடுத்த காரியம் வெற்றி, தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

மகரம் :- சமய/சமூக வையில் நற்பெயர், தேகசுகம் நன்று, புத்திரர் சுகம், தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

கும்பம் :- மாதா சுகயீனம், வைத்தியச்செலவு, வாகனச்செலவு, வீட்டில் செலவு, தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

மீனம் :- மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, பணவரவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : கே.பானுஜா
முகவரி: மூளாய், வட்டுக்கோட்டை.

நான்காவது அகவையில்



பெயர் :ர.கார்த்திகா
முகவரி:ஜேர்மனி

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்


நிரஞ்சனாஸ் சங்கானை
HARRISON FORD
நடித்த
AIR FORCE - ONE
காட்சிகள்:
11.00, 2.45, 6.00
17-12 முதல் 7.45 (பு.நே)
20-12-2002 முதல்
அர்ஜின், தபு, சார்லி நடித்த
தாயின் மணிக்கொடி
11.00, 2.45, 6.00
(சி-287)

ராஜா
யாழ்ப்பாணம்.
18ஆம் திகதி வரை
வில்லன்
10.30, 2.30
16 - 18 வரை
UNIVERSAL SOLDIER
(WAR FILM) 7.00 மட்டும்
(சி-262)

# விடுதலைப் புலிகளின் நீதிமுறை உயர்தரத்தில் பேணப்படுகின்றது!

## சர்வதேச மனித உரிமை அமைப்பு பாராட்டு

(கொழும்பு)

புலிகளின் நீதிமன்றங்கள் இன்றைய நிலையில் பிரச்சினைக்குரியதொரு விடயமல்ல. இப்போது பேச்சுக்கள் நடைபெறுவதால், வருங்காலத்தில் சட்ட நடைமுறைகள் குறித்து ஆராயும்போது இது குறித்து ஆராயலாம் என ஜுரிகள் தேசிய ஆணைக்குழுவின் துணைத் தலைவரும், சர்வதேச ஜுரிகள் சங்க உபதலைவருமான டெஸ்மன் பெரேரா தெரிவித்துள்ளார்.

புலிகளின் நீதிமன்றங்கள் குறித்து, குற்றவியல் சட்டங்களின் படி கருத்தில் எடுக்கப்படவேண்டியதே. ஆனால் இலங்கையின் நீதிச் சேவை ஆணைக்குழு திறமையாக இயங்கவில்லை. அதன்மீது மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக தெரியவில்லை.

அதேவேளை, அண்மையில் சர்வதேச மனித உரிமை அமைப்பு பிரதிநிதிகள் இலங்கை வந்திருந்தனர். இவர்கள், புலிகளின் நீதி நிர்வாக முறைகள், நீதி வழங்குவோர் உயர்தரத்தில் இருப்பதாக பாராட்டுத் தெரிவித்துள்ளனர் என டெஸ்மன் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் நீதிமன்றங்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்காது

## சென்னையில் அமைச்சர் மாரப்பன கருத்து



விடுதலைப்புலிகள் அமைத்து வரும் பொலிஸ் நிலையம் மற்றும் நதிமன்றங்கள் தொடர்பாக இலங்கை அரசு இப்போது எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டாது என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சென்னையில் செய்தியாளர்களிடையே பேசும்போது தெரிவிததார்.

இந்தியா சென்றுள்ள அமைச்சர் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில், இத்தகைய புலிகளின் நிர்வாக அமைப்புகள் காலப்போக்கில் இலங்கையின் தேசிய கட்டமைப்புகளுக்குள் உள்வாங்கப்படும் என்றார்.

நோர்வே உதவியுடன் தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களுக்கு இந்தியா தன்னாலான உதவிகளை வழங்கி வருவதாகவும் அமைச்சர் மாரப்பன தெரிவித்தார்.

# கிணற்றில் தவறி வீழ்ந்து பெண் பரிதாப மரணம்!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அல்வாயில் பெண்ணொருவர் கிணற்றுக்குள் தவறுதலாக விழுந்து பலியாகியுள்ளார்.

சாவகச்சேரி அல்வாயைச் சேர்ந்த திருமதி இரஞ்சிததேவி (42) என்பவரே நேற்றுமுன்தினம் மாலை கிணற்றுக்குள் தவறுதலாக வீழ்ந்து பலியானவராவார்.

# யாழ்ப்பாண கல்வித்தர வீழ்ச்சிக்கு காரணம் கண்டறியப்படவேண்டும்

## தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பூராவும் ஒப்பீட்டு அளவில் கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்த யாழ்ப்பாண மாவட்டம், இன்று கல்வியில் பின் தள்ளப்பட்ட மாவட்டமாக மாறியிருக்கின்றது. கல்முனை கல்வி மாவட்டம் முன்னிலையில் நிற்கின்றதென்றால் அவர்களது கடுமையான உழைப்பே அதற்குக் காரணமாகும். கல்விக்காக கடுமையாகத் தம்மை அர்ப்பணித்த கல்வியாளர்களின் கல்விப் பணியைப் பின்தொடரும் அதிபர்கள், கடமையை மட்டும் பொறுப்பேற்பதுடன் நின்றுவிடாது முன்சென்றோரின் அர்ப்பணிப்பையும் பொறுப்பேற்றுக் கடமை புரியவேண்டும்.

பழைய குடிசன மதிப்புப் புள்ளி விபர அடிப்படையில் 9 லட்சம் மக்களின் விகிதாசாரத்திலேயே யாழ். மாவட்டம் மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்குள் அனுப்புகின்றது. அண்மையான சனத் தொகைப்படியாயின் இது மூன்றில் இரண்டு மடங்காகக் குறையும். இவ்வாறு கல்வி மேம்பாட்டுப் பேரவைத் துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், யாழ். மத்திய கல்லூரியில் அதிபர் சங்கத் தலைவர் செ.சேதுராசாவின் தலைமையில் நடைபெற்ற, வடமாகாண அதிபர்கள் சங்க வருடாந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.



நேற்றைய நிகழ்வில் அதிபர் சங்கத் தலைவர் உரையாற்றுகிறார்.

மேலும் அவர் பேசுகையில், தரப்படுத்தல் முறைமூலம் திறமையான மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்ல முடியாமைக்காக போராட்டத்தில் குதித்த யாழ்ப்பாண மா்வட்டம் - இன்று பல் கலைக்கழகத்திற்குச் செல்வதற்



அருண் மாஸ்ரர்

கான மாவட்டக் கோட்டாவை மட்டும் எதிர்பார்த்து நிற்கின்றதென்றால், இதற்கு நாம் சகலரும் உரிய காரணத்தைக் கண்டறிய வேண்டும். இதற்கு அதிபர்களாகிய உங்களின் கடுமையான உழைப்பை இன்று எமது மண்ணும், மக்களும் வேண்டி நிற்கின்றார்கள் என்றும் அருண் மாஸ்ரர் கூறினார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் உட்படப் பலரும் அங்கு உரையாற்றினர்.

# தெருவில் வந்த வயோதிபர் மீது மோட்டார் சைக்கிள் மோதியது!

## கால் முறிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்புத்துறை)

தெருவினால் நடந்து வந்த வயோதிபரை மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதியதில் இருவருமே படுகாயமடைந்தனர்.

புத்தூர் அஞ்சல் அலுவலகத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் மாலை 3.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

புத்தூரைச் சேர்ந்த செல்லன் தர்மகுலசிங்கம் (வயது 51) என்ற வயோதிபர், இடதுகால் முறிவடைந்த நிலையிலும், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரான நல்லையா சிவசுந்தரம் (வயது 40) என்பவர் தலையில் படுகாயமடைந்த நிலையிலும் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள்,

மேலதிக சிகிச்சைகளுக்காக பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (60,110)

## சின்னஞ் சிறு செய்திகள்

### பளைப்பகுதியில் முன்பள்ளிகள்

(பளை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் - பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் முன்பள்ளிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதன்படி கடந்த மாவீரர் தினத்தில் தர்மக்கேணியில் முன்பள்ளி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அடுத்த ஆண்டில் கோயில் வயல், முகாவில் ஆகிய இரு இடங்களிலும் இரு முன்பள்ளிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக நிறுவன இணைப்பாளர் த.புலேந்திரன் தெரிவித்தார். (115)

### அறநெறிப் பாடசாலை அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இயங்கும் அறநெறிப் பாடசாலை அதிபர்கள், பொறுப்பாளர்கள், ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப்பாசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். கொண்டலடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளர் செ.நகுலேஸ்வரன் கேட்டுள்ளார். (ச)

### குருநகரில் 'புரட்சித் துறவி' நாட்டுக்கூத்து

(கொழும்புத்துறை)

இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு தினத்தை முன்னிட்டு குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் வழங்கும் "புரட்சித்துறவி" என்னும் தென்மோடி நாட்டுக்கூத்து, குருநகர் கலையரங்கில் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. (60)




தேங்கும் மழைநீரில் குழந்தைகளை விளையாட விடாதீர்கள்.

~ தமிழீழ சுகாதார சேவை.


## சின்னஞ் சிறு செய்திகள்

### எள்ளங்குளம் பொது மயானத்தின் அவலநிலை

எள்ளங்குளம் பொதுமக்கள் மயானம் எவ்வித அடிப்படை வசதியுமின்றி காணப்படுகின்றது. மழை காலத்தில் இந்த மயானமும், மயானத்திற்கு செல்லும் பாதையும் குன்றும் குழியுமாகவும் - வெள்ளக்காடாகவும் காட்சியளிக்கின்றது.

அத்துடன், மயானத்தைச் சுற்றி பற்றைக்காடுகள் காணப்படுகின்றன. இவ்விடத்திற்குச் செல்லும் மற்றைய இரு வீதிகளும் காடு மண்டிக் கிடக்கின்றன.

இவ்விடயம் சம்பந்தமாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்கு மக்களால் அறிவிக்கப் பட்டும் - இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (116)

### கப்பூது செல்லும் வீதி பழுதடைந்த நிலையில்

(வரணி)

வரணி மகா வித்தியாலயத்தில் இருந்து வரணி - இயற்றாலை ஊடாக கப்பூதிற்கு செல்லும் வீதியானது 30 ஆண்டுகளாக திருத்தப்படாமல், குன்றும் குழியுமாக இருப்பதனால் - அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வைத்தியசாலை, ப.நோ.கூ. சங்கம், பாடசாலை, சந்தை மற்றும் விவசாய நிலங்கள் என்பவற்றிற்கு செல்கின்ற பிரதான பாதையாக இவ் வீதி அமைந்துள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை எடுத்துக்கூறியும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (27)

### தென்மராட்சியில் நெற்பயிர்களில் நோய்த் தாக்கம்

(வரணி)

தென்மராட்சி பிரதேசத்தில் குறிப்பாக வரணி, தாவளை, இயற்றாலை, மந்துவில், மாசேரி, மீசாலை, அல்லாரை ஆகிய பகுதிகளில் மேற கொள்ளப்பட்ட காலபோல நெற்செய்கை வயல்களில், நெற்பயிரில் இலைச்சுருட்டிப்புழுவின் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் மப்பும் மந்தாரமுமான காலநிலை இப்புழுத் தாக்கத்திற்குச் சாதகமாக உள்ளது. ஆகவே, நெற்செய்கையாகர்கள் உடனடியாக "குளோறோபைறிபொஸ்" பூச்சிநாசினியை விசிறி, தாக்கத்தைக் கட்டுப்படுத்துமாறு சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் சி.துரைராசா விவசாயிகளுக்கு அறிவித்துள்ளார்.

### நோயாளரை மகிழ்ச்சிப்படுத்திய நத்தார் தாத்தா

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெறும் நோயாளர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக நத்தார் தாத்தா வருகை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட மாணவர்கள் இதனை ஏற்பாடு செய்ததோடு, அன்பளிப்புப் பொருட்களையும் நோயாளர்களுக்கு வழங்கினர். (60)



பெண்களுக்கெதிரான வன்முறை வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட பாதிப்புற்ற பெண்கள் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பேரணியின் ஒரு காட்சி. (08)

# தேசிய சிறுபான்மையினரை கௌரவிக்கும் கனடாவின் பன்மைத்துவக் கலாசாரம்!

## சுயநிர்ணயம் - ஒரு பார்வை
### பகுதி 12

கனடா நாட்டினது சமஷ்டி முறைமையை தற்பொழுது பார்த்துக் கொண்டிருக்கும் இவ்வேளை -



பாரம்பரியமே உறுதி

கனேடிய சமஷ்டி அரசியல் திட்டம் உருவாக அடிப்படையாக இருந்த காரணத்தை இவ்வாரத் தொடரிலே பார்ப்போம்.

காலனித்துவ காலத்தில்- கனடா நாடானது பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் ஆதிக்கத் திற்குள் இருந்தது. பிரான்சின் நேரடிக் காலனித்துவத்திற்குள்ளும்- அதேவேளை, அமெரிக்க சுதந்திரப் போராட்ட காலத்தில் - ஆங்கிலேயரின் ஆதிக்கம், வட அமெரிக்க கண்டத்திலே நிலைநிறுத்தப் பட்டதால்- கனடாவின் பெரும் பகுதி அங்கிலோ சக்ஸன் மக்களின் (Anglo saxlon) கட்டுப்பாட்டினுள் கொணடு வரப்பட்டது.

இதேவேளை - கனேடிய நாட்டின் சுதேசிகள் செவ்விந்தியர்களே. இவர்கள் இன்றும் ஒன்பது மாநிலங்களிலும் சிறுபான்மையினராகவும், மேற்குலக கண்ணோட்டத்தின்படி அபிவிருத்தி அடையாத சிறு குழுமங்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆனால் - இன்று சுதேசிகளுக்கு அவர்களது வாழ்வை மேம்படுத்த, அவர்களது கலாசாரத்தைப் பேண அரசியல் திட்ட அங்ககாரம் வழங்கப் படுகின்றது. இவ்விடயம் பற்றிக் இன்றைய கட்டுரையின் பின் பகுதியில் பார்ப்போம்.

கனடா - சமஷ்டி முறைக்குள் பிரவேசிப்பதற்கு அடிப்படையில் இரண்டு புறச்சூழல் காரணிகள் காணப்பட்டன.

அவற்றில் ஒன்று - கியூபெக்கின் தேசியவாதம்- அதாவது மொத்த கனேடியர்களில் 25 சதவீதத்தினரான, பிரெஞ்சு மொழி பேசும் கனேடியர்கள், கியூபெக் மாநிலத்தில பெரும்பான்மையினராக இருந்தனர். அவர்கள் தமது மொழியும் கலாசாரமும் பேணப்பட்டு, "பிரெஞ்சுக் கனடா" வாக திகழ வேண்டும் என விரும்பினர்.

இரண்டாவது புறச்சூழல் காரணியாக அமெரிக்கா அமைந்தது. எப்படியென்றால் - கனடாவின் அயல வீட்டுக்காரனான அமெரிக்கா 13 நாடுகளின் கூட்டமைப்பாக இருந்து, தன்னை மேலும் ஸ்திரப்படுத்த சமஷ்டித் தத்துவத்தினை துணை கொண்டது மட்டுமல்லாது, பிரித்தானியாவிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுயன்று, அதில் வெற்றியும் பெற்றுக் கொண்டமை, பிரெஞ்சுக்கனடியர்களுக்கு அருகில் இருந்த, தக்கதொரு அனுபவமாகவும் அமைந்தது.

இதனடிப்படையிலே - 1867 இல் கனேடிய அரசியல் திட்டத்தினை வகுக்கின்றபோது - பிரெஞ்சுக் கனேடியர்கள்- தமக்குரிய இறைமையினை, சுயாதிக்கத்தினை, சுய நிர்ணயத்தினை நிலைநிறுத்தத் தலைப்பட்டனர்.

கியூபெக்கியர் (பிரெஞ்சுக் கனேடியர்) தமது தரப்பின் முன்மொழிவுகளை சமஷ்டித் தத்துவத்தின் அடிப்படையிலேயே கோரினர்.

அவ்வாறு, அவர்கள் முன்வைத்த முன்மொழிகளின் அடிப்படையிலே தான் - 1867 ஆம் ஆண்டு அரசியல் திட்டம் இரண்டு சமஷ்டிகளாக மட்டுமே கனடாவை வரைந்தது.

கியூபெக்கியர் முன்வைத்த சமஷ்டிக் கோரிக்கைகளை சட்டவாக்கம் செய்து, 1867 இல் கனேடிய அரசியல் திட்டத்தின் சரத்துக்களான 94ம், 133ம் ஏற்றுக் கொண்டன.

அந்த வகையில் கியூபெக்கியர் முன்வைத்த முன்மொழிவுகளை - இங்கு நோக்கமுடியும்.

### பிரெஞ்சுக் கனேடியர்களின் முன்மொழிகள்

✦பிரெஞ்சுக் கனடா, ஆங்கிலக் கனடா என்ற இரண்டு சமஷ்டிகளும், ஒன்றுக்குகொன்று எவ்விதத்திலும் மேலாண்மை செலுத்தாத விதத்தில், அரசியல் திட்டத்தின் அடிப்படையில் - இரண்டு சமஷ்டிகளின் இணையமாக கனடா விளங்க வேணடும் எனவும், இந்த இரு சமஷ்டிகளின் இறைமையை அரசியல் திட்டம் உறுதி செய்யவேண்டும் எனவும், கியூபெக்கியர்கள் முன்மொழிந்தனர்.



அடையாளம் தவறாத ஆதிவாசிகள்

✦ நாட்டின் முழுமையான மேலாதிக்கம் மிக்க இறைமையானது - மேற்சொன்னவாறு வரையப்பட்ட அரசியற்திட்டத்தின் மீதே இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் எந்தவொரு சமஷ்டி அரசும், தனிதது அதிகாரங்களைக் கையாளக் கூடாது. அரசியல் திட்டத்தில் ஏதாவது திருத்தங்களை எதிர்காலத்தில் கொண்டு வருவதானால் - இரண்டு சமஷ்டிகளினதும் பூரண சமமதத்துடன்தான் கொண்டுவரப்பட வேண்டும்.

✦இரண்டு சமஷ்டி அரசுகளுக்கும தனித்தனியான சட்டவாக்கச்சபைகளைத் (Legislatures) தம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும். சமஷ்டி அரசுகளுக்கென ஒதுக்கப்பட்ட விடயங்களில், சுயாதிக்கத்தை நிலைநிறுத்த இச்சமஷ்டிகளின் மாநிலச் சட்டவாக்க சபைகளுக்கு பூரண அதிகாரம் இருக்கவேண்டும்.

✦மேற்கூறியவாறு உருவாக்கப் படும் மாநில சட்டவாக்க சபையின் அதிகாரம் - குறித்த மாநிலத்தின் பாரம்பரிய புவியியல் எல்லைக்கு (Geographical territorry) அப்பால் செல்லக் கூடாது - அதாவது, சமஷ்டியின் இறைமையானது - அதனது வரையறுத்த அரசியல், புவியியல் எல்லைகளுக்கப்பால், மற்றைய சமஷடி அரசாங்கத்துக்குள் தலையிடக் கூடாது.



கனடா வரும் அங்லோ சக்ஸியன்கள்

✦இரண்டு சமஷ்டிகளின் அதிகாரங்களும் ஒன்றையொன்று மேவும் விடயங்களில் (Overlappihg matters)- தேவையை உணர்ந்து, அவற்றினை 'சாம்பல் பிரதேசம்' (Grey areas) என வரையறுத்து, அவற்றை எவ்வாறு கையாளவேண்டும் என்பதனை அரசியற்திட்ட நீதிமன்றம் கூற வேண்டும். இந்த வகையில், இரண்டு சமஷ்டிகளின் இறையாண்மையும் ஒன்றுடன் ஒன்று முரண்படாதவகையில் - அரசியல் திட்ட நீதிமன்றம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

✦சமஷ்டியின் இறைமையாதிக்கம் தெளிவாக என்னென்ன விடயங்களில் உள்ளது என்பது - அரசியல் திட்ட ரீதியாக வரையப்பட்டு உறுதிப்படுத்துவதோடு, காலப்போக்கில் அவ்விட யங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு - மாநில சட்டவாக்க சபைகளுக்கு பெரும்பான்மை பலம் இருக்குமிடத்து, அம் மாற்றங்களை நிறைவேற்றும் உத்தரவாத்தினை அரசியல் திட்டம் வழங்கவேண்டும்.

✦இரு சமஷ்டி மாநில அரசுகளும் முரண்படும் விடயங்களில்- கூட்டு அங்கத்துவ அடிப்படையிலே - அதாவது, இரண்டு சமஷ்டி அரசுகளின் அங்கத்தவர்களை உறுப்பினராகக் கொணட, அரசியல் நிறுவனங்கள் மூலம் முரண்பாடுகளைத் கூட்டுமுயற்சியில் (Joint venture) தீர்க்க முயலவேண்டும்.

✦கனேடிய மத்திய அரசாங்கத்தின் மந்திரிசபையில், மாநிலங்களுக்குரிய பிரதிநிதித்துவம் வழங்கப் படுவதோடு, மாநில விடயங்களை மத்திய அரசு கையாளும் போது - மாநில அரசாங்கத்திற்குக் கூடுதலான முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

✦ஒவ்வொரு சமஷ்டி அரசாங்கமும் தனக்குரிய வருமானத்தினைப் பெறுவதற்கு வருவாய் மூலங்களைத் தானே தீர்மானிக்கும் அதிகாரம் இருக்கவேண்டும். அதாவது- தீர்வைகள், வரிகள் என்பவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரம், சமஷ்டி மாநில அரசுகளுக்கு இருக்கவேண்டும்.

✦அதேபோல், இரண்டு சமஷ்டிகளும் - அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் என்பவற்றை, தமது தேவைகளுக்கு ஏற்ப நிர்வகிக்கவும், பராமரிக்கவும் சமஷ்டி அரசுகளுக்கு பூரண அதிகாரம் வேண்டும்.

ஆகியன உள்ளடங்கிய 13 முன்மொழிவுகளை - கியூபெக் மக்கள் முன்வைத்தனர்.

மேலே கூறப்பட்ட விடயங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு - 1867 இல் கனேடிய சமஷ்டி அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1982 ஆம் ஆண்டு - அரசியல் திட்டத் திருத்தச் சட்டங்களின் மூலம, நீதித்துறையானது சமஷ்டிகளிடையே மிகவும் பரந்தளவில் பகிரப்பட்டது. ஏனெனில், 1982 ஆம் ஆண்டு - கியூபெக் பிரிந்து தனியரசு அமைப்பதற்கான முயற்சியில் இறங்கியமையால் நீதித்துறையின் அதிகாரம் பகிரப்பட வேண்டிய அவசியம் எழுந்தது.

### பகிரப்பட்ட நீதித்துறை

இந்த வகையில், நீதித்துறையானது, சமஷ்டி அரசுகளின் இரட்டைத் தன்மைக்கு (Duality of Federal institution) ஏற்ப - தன்னை வடிவமைத்துக் கொணடது.

உதாரணமாக - கனேடிய உயர் நீதிமன்றத்தினை எடுத்துக் கொள்வோமாயின் - உயர் நீதிமன்றத்தில் 9 நீதிபதிகள் இருப்பார்கள். இவர்களில் 3 நீதிபதிகள் கியூபெக் மாநிலத்தின் நீதிமன்றினைச் சேர்ந்தவர்களாக இருப்பர். கியூபெக்கில் இருந்து உயர் நீதிமன்றத்திற்கு வரும் வழக்குகளுக்கு - கியூபெக்குரிய சட்ட விவகாரங்களுக்கு ஏற்ப, இம் மூன்று நீதிபதிகளுமே தீர்ப்பு வழங்குவர். இந்த நடைமுறையானது ஒரு சுவாரசியமான விடயம் என்பதை வாசகர்கள் கருத்திற் கொள்ளலாம்.

இதே மாதிரி - ஆங்கிலமொழி பேசும் கனேடிய சமஷ்டிகளில் வாழும் பிரெஞ்சு மொழி சிறுபான்மை கனேடியர்களுக்கும் - அவர்களது மொழி, கலாசாரம் என்பவற்றைப் பேணவும், அவர்களுக்குரிய கல்வி மற்றும் கல்வி ஊடகமொழி என்பவற்றுக்கான அங்கீகாரத்தினையும் 'Charter of Rights and Freedoms of 1982' என்ற அரசியலமைப்பு பிரிவு உத்தரவாதம் அளிக்கின்றது.

1982 ஆம் ஆண்டு அரசியல் திட்ட திருத்தச் சட்டத்தின் 23 வது சரத்து இதனை உறுதி செய்கின்றது.

### மதரீதியான உரிமைகள்

மேலும், 1982ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தில் சரத்து 16 (2) பிரிவு- மத வேறுபாட்டினை ஏற்றுக் கொணடு, மதம் சார்ந்த விடயங்களில் பூரண உரிமையும் பிரெஞ்சுக் கனேடிய சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சுக் கனேடியர்கள் சிறுபான்மையினராக வாழும் - ஆங்கிலேயக் கனேடியர்களின் மாநிலங்களில் சுதந்திரமாக, தமது மதச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அனுமதியினையும் அங்கீகாரத்தினையும் அரசியலமைப்பு வழங்குகின்றது.

அதாவது, சமஷ்டி முறையின் கீழ், தொடர்ச்சித் தன்மையற்ற சனத தொகைப் பரம்பலைக் கொண்டுள்ள கலாச்சார பன்மைத்துவ பாரம்பரியம் (Multi cultural heritage of Canadians) ஒன்று உள்ளது எனக் கனேடியர்கள் பெருடையுடன் கூறுகின்றனர்.

### ஆதிவாசிகள் மீதும் விசேட கவனம்

இதன்படி - கனேடிய ஆதிவாசிகள் விசேட கவனத்தினைப் பெறுகின்



றனர். இவர்கள், ஐரோப்பாவின் 'அங்கிலோ சக்ஸன்" பிரிவினர் கனடாவில் குடியேறத் தொடங்க முன்னர் - கனடாவில் பரவலாக வாழ்ந்தவர்கள்.

இவர்கள் - தற்பொழுது மொத்த சனத்தொகையில் 3 சதவீதத்தினராகக் காணப்படும் அதேவேளை, கனடாவில் பரவலாக ஒரு மி[illegible]யன் சனத்தொகையினராகவும் உள்ளனர். ஆதிவாசிகளான இவர்களது

சிறுபான்மை மக்கள்,தாம் வாழும் மாநிலங்களிலும்- தமது மொழியினை, மதத்தினை, கலாசாரத்தினை பேணவும் வளர்க்கவும் அரசியல் திட்ட ரீதியாக உறுதி வழங்கப்பட்டிருப் பதைக் காணலாம்.

### அரச கரும மொழிகளும் சிறப்புரிமையும்.

கனடாவில் அரச கரும மொழிகளாக ஆங்கிலமும், பிரெஞ்சும் - சகல சமஷ்டி மாநிலங்களிலும் தற்பொழுது காணப்படுகின்றன.

இதற்கு 1982 அரசியல் திருத்தச் சட்டத்தின் சரத்துக்கள் 16 (3), 17 (2), 18 (2), 19 (2), 20 (2) என்பன உறுதியளிக்கின்றன.

இதனையும்விட பிரெஞ்சு மொழிப் பிரயோகம் பற்றிய சிறப்புரிமையாக, பிரெஞ்சுக் கனேடியர்கள் சிறுபான்மையினராக இருக்கும் மாநிலங்கள் யாவற்றிலும் ஆங்கிலத்துடன் இணைந்தவகையில் பிரெஞ்சும் அரச கரும மொழியாக ஏற்றுக்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்தில் (ஓட்டாவா அரசாங்கம்) கியூபெக்கியன் கட்சியினர், 'பிரேரணை- 101' (Bill 101) யினைக கொண்டு வந்தபோது, அதனை ஏற்று பிரெஞ்சு மொழிக்கான சிறப்புரிமையினை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

### பல்வேறு மக்களின் தாயகம்

இதேவேளை - கனடா பிரெஞ்சுக கனேடியர்களுக்கு மட்டுமன்றி, ஏனைய சகல குடியேற்றக்காரர்களுக்காகவும், கனேடிய ஆதிவாசிகளான சுதேசிகளுக்குமாகவும் கலாசாரப் பன்மைத்துவத்தினை 1982 ஆம் ஆண்டு முதல் அரசியல் திட்ட

**வேலும்மயிலும் சேந்தன்**

ரீதியாக ஏற்றுக்கொண்டுள்ளது.

'பல்வேறு மக்களின் தாயகம் -கனடா' (Canada - a home land of Many pople) என்ற வாசகம் 1982 ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த வகையில் - கனடாவின் தற்போதைய சமஷ்டிக் கொள்கை பரந்தளவில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கனேடியர்களின் மொழி மெத்திஸ் (Metis) என அழைக்கப்படுகின்றது.

தாங்களே 'தேசத்தின் முதன்மையாளர்' (We are the First Nations) என்று தம்மைக் கூறிக்கொள்வதுடன் "தேசத்தின் முதன்மையாளர் சபை" (Assembly of First Nations) என்ற அமைப்பினை தற்பொழுது உருவாக்கி, தங்களது நலன்சார்ந்த விடயங்களில் அவர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். மேலும் தமது இறைமையை குடியேறிய ஆங்கிலேயர்களிடம் பறிகொடுக்க மாட்டோம் எனவும், தமது வாழ்க்கைமுறை மற்றும் நடத்தைக் கோல[illegible]களை தாம் தொடர்ந்து பேணியு[illegible] பராமரித்தும் வருவோம் எனவும் அவர்கள் உறுதியாகவுள்ளனர்.

அதேவேளை - தம்மைத்தாமே ஆளுவதற்கான சுயநிர்ணயம் தமது பிறப்புரிமை என அவர்கள் வாதாடுகின்றனர். இவர்களின் கோரிக்கைகளை செவிமடுத்த கனேடிய அரசாங்கம் - 1997 இல் ஆதிவாசிகளின் விடயங்களை கையாள்வதற்கு ஒரு அரச ஆணைக்குழுவினை (Royal Commission on the Aboriginal people) நியமித்ததன் பிரகாரம் - அவ்வாணைக்குழு முழுநீள அறிக்கை ஒன்றினை ஆதிவாசிகள் தொடர்பான விடயங்களைக் கையாள்வது பற்றி வெளியிட்டது.

இதற்கமைய, மனிற்ரோபா (Manitoba) மாநிலத்தில் - ஆதிவாசிகள் தமது சுயநிர்ணயத்தினை நிலைநிறுத்தத்தக்க வகையில், கட்டமைப்பு மற்றும் நிறுவன வசதிகளை கனேடிய அரசு தற்பொழு[illegible] வழங்கியுள்ளது. ஆதிவாசிகள் - மனி[illegible]ரோபா மாநிலத்தின் ஒரு பகுதியில் தமது சுயாட்சியினை உறுதி செய்[illegible]துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

இவ்வாறு கனடா பன்மைத்து[illegible]வத்தினை ஏற்றதன் பிற்பாடு[illegible] கியூபெக் - 1995 ஒக்டோபர் 3[illegible] ஆம் திகதி கனேடிய சமஷ்டியி[illegible] இருந்து விலகி, தனியரசு அமை[illegible] பதற்கான மக்கள் தீர்ப்பினை வேண[illegible] நின்றது. மக்கள் தீர்ப்பானது பி[illegible]வினைக்கு எதிராக வழங்கப்பட்டது.

மிகக்குறுகிய வாக்கு வீதத்தில்- தனியாக பிரிந்து செல்லும் இத் தீர்மானம் தோற்றதன் பின்புலங்கள் பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்.

(பிரதி செவ்வாய் தொடரும்)

# உலகில் மிகப்பெரும் விண் தொலைகாட்டி



உலகில் மிகப்பெரும் விண்ணியல் தொலைநோக்கியை உருவாக்க ஐரோப்பிய விண்ணியல் ஆய்வாளர்கள் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனர். இத்தொலைநோக்கியின் பிரதான ஆடியின் விட்டம் 100 மீற்றா. இதன் மூலம் விண்ணில் மூலையில் ஒதுங்கியிருக்கும் பொருட்களையும் தெளிவாகக் கண்டறிய முடியும். தற்போது பாவனையில் உள்ள பெரிய தொலைக்காட்டியின் ஆடியின் விட்டம் 11 மீற்றர் மட்டுமே. (அமெரிக்க ரெக்ஸாஸ் மாநிலத்தின் **Fowlkes** மலையில் அமைந்த **Hobby-Eberly** தொலைநோக்கி) இப்பெரிய சாதனத்தை-விண்ணைத் தெளிவாகப் பார்க்கக்கூடிய-மிக உயரமான இடத்தில் பொருத்துவதுதான் இப்போதுள்ள சவால். இதைப் பொருத்த உதைப்பந்தாட்ட மைதான அளவிலான சமதரை மலைஉச்சியில் தயார் செய்ய வேண்டும். 10 ஆயிரம் தொன் நிறையுடைய தொலை நோக்கியை பொருத்தவேண்டும். இவை , நாம் எதிர்நோக்கும் சவால்கள் என்கின்றார் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜெரி கிளிமோர் .

5000 மீற்றருக்கு மேல் மலையில் பொருத்தப்படும் இத்தொலைநோக்கியை சுமார் 3000 மீற்றர் உயரத்தில் இருக்கும் கணினி முறை இயக்கிகளால், விஞ்ஞானிகள் தூரத்திலிருந்து இயக்கத் திட்டமிட்டுள்ளனர். பூமியைப் போன்ற வேறு கோள்கள் அகண்ட விண்வெளியில் உண்டா என அறிவதே இத்தொலைநோக்கியின் பிரதானபணியாக இருக்கும்.



# பிரிட்டனில் மருத்துவர்கள் தாதிகளுக்கு எயிட்ஸ் பரிசோதனை



**பு**திய மருத்துவர்களிலும் தாதிமார்களிலும் எயிட்ஸ் நோய்த்தாக்கம் இருக்கிறதா என சோதிக்கும் **(H.I.V Test)** திட்டத்தை பிரிட்டன் சட்ட பூர்வமாக்கியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள பெருமளவு மருத்துவர்களும் தாதிமார்களும் எயிட்ஸ் காவிகளாக இருக்கலாம் என எழுந்த அச்சத்தையடுத்தே, பிரிட்டன் இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஆபிரிக்காவிலிருந்து வந்த அநேகமான தாதிகள், எயிட்ஸ் காவிகளாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.




# நீண்ட பாறை அணை



**அ**வுஸ்ரேலியாவின் கிழக்குக் கரையில் 2000 கிலோ மீற்றருக்கு பவளப்பாறை அணை ஒன்று **(Great Barrier Reef)** இயற்கையாக அமைந்துள்ளது. சுமார் 2900 தனித்தரைப் பவளப்பாறைகள் இணைந்து இந்த அணை உருவாகியுள்ளது. 350,000 சதுர கிலோமீற்றர் பரப்பை இது கொண்டது. அழகாக கடலினுள் தோன்றும் இந்தப் பவளப்பாறை அணையினுள், உலகின் அரிய அழகான மீனினங்கள் வசிக்கின்றன. கடல்மெல்லுயிரிகள் இறந்து பல்லாண்டுகளாக படை படையாகப் படிந்து, இந்த அணை உருவாகியுள்ளது. உயிருடன் இருக்கும் கடல் மெல்லுயிர்களால் இந்த அணை பல வர்ணங்கள் பெற்று நீலக் கடலினுள் மிக அழகாக மின்னுகின்றது. இப்பகுதியை பகல் கனவுகளின் தீவு என்று கூறுவது பொருத்தம்தான்.

## ஒரு போர்க்கப்பலின் புறப்பாடு



ஜப்பானியத் துறைமுகமான யொக்கோசுகாவிலிருந்து- இந்து சமூத்திரம் நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது, கிரிஷிமா என்ற மிக நவீன ஜப்பானிய போர்க்கப்பல். துறைமுகத்தை விட்டுப் புறப்படும் கப்பலிலுள்ள பணியாளர்களுக்கு பிரியாவிடை கொடுக்கும் உறவினர்களையும் நண்பர்களையும் இங்கே காண்கின்றீர்கள். பிரிவு குறுகியதானாலும் துயரம் பெரிதுதானே.

# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்



அரங்கம் 11

**தி**ட்ராம்ப், ஒரு பெரும் முன்னேற்றம். சார்லி என்றாலே மக்களின் மனதில் உடனே தோன்றக்கூடிய சிறிய நாடோடி இந்தப் படத்தில் தான் முழுவடிவமாகக் காட்சியளித்தார். சிறிய, இழித்தோற்றமான குழந்தைக்கும், மனிதனுக்கும் உள்ள குணாதிசயங்களின் விசித்திர கலவைக் குணம் கொண்ட பண்பான, சிந்தனையைத் தூண்டுகின்ற, குறும்புக்கார, தைரியமான, எப்போதுமே துன்பங்களைக் கடந்து பிழைத்தெழும் அந்தக் கதாபாத்திரத்தை இந்த உலகமே இதயத்தில் சுமக்க இருந்தது. இந்த உலகமே அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய, ஒரு கதாபாத்திரத்தை சார்லி கண்டறிந்து விட்டார். அவருடைய சோகங்களும், அவர் பாணி நகைச்சுவையும் எல்லைகளைக் கடந்தன, மௌனமாய் இருந்ததால் எல்லோ ரும் அவரைப் புரிந்து கொண்டார்கள்.

'Life' என்றொரு நீளப்படத்தைத் தயாரிக்க விரும்பினார் சார்லி. தன் நகைச்சுவையில் கூடுதல் இயற்கைத்தனத்தையும், உண்மைகளையும் பிரதிபலிக்க நினைத்தார். அவருடைய சிறிய நாடோடி, தனிமை உலகததில் பவனிவருவான். சிறுவயதில் சார்லி கண்டு உணர்ந்த வறுமையை அவன் அனுபவிப்பான்.

ஆனால், இந்தப் படம் லாபம் கொடுக்காது என்று கம்பனி நினைத்தது. அதனால் இந்தத் திட்டத்தையே சார்லி கைவிடநேர்ந்தது. ஆனால் எஸ்ஸனே கம்பனி, இந்தப் படத்துக்காக எடுத்திருந்த காட்சிகளிலிருந்து சில பகுதிகளை வேறு படங்களுடன் சேர்த்து விட்டது. இதனால் சார்லிக்கு மிகுந்த மன வேதனையும், கோபமும் ஏற்பட்டது. காரணம், அவை இப்போது பொருத்தமற்றுப் போய் விட்டன.

பரீட்சார்த்த முறையில் எடுக்கப்படும் காட்சிகளை எப்போதுமே அழித்துவிட விரும்பினார் சார்லி. காரணம், அவைகளால் மக்களை ஒரு மாயைக்குள் தள்ள அவர் விரும்பவில்லை. சிறுவயதில் அவர் கண்ட, வியர்வை சிந்தும் பேலே நடனக்காரர்களும், சோகமும் உணர்ச்சிகளும் கொண்ட நகைச்சுவை நடிகர்களும் நினைவுக்கு வந்தன. அதனால் இறுதி வடிவத்தை மட்டுமே மக்கள் பார்க்க வேண்டும் என்று விரும்பினார்.

அதிர்ஷ்டவசமாக இந்த விருப்பம் மீறப்பட்டது. அவர் இறந்தபிறகு, கெவின் பரௌன்லோ மற்றும் டேவிட் கல் என்ற ஆங்கிலேய ஆராய்ச்சியாளர்கள், அவர் நிராகரித்திருந்த ஏராளமான படச்சுருள்களைத் தேடிப்பிடித்து சார்லி எப்படித் தன் படங்களை உருவாக்கினார் என்ற செய்திப்படத்தை தயாரித்தனர்.

ஒரு மேதையால்தான் அந்தக் காட்சிகளை நிராகரித்திருக்க முடியும். அவைகளை எடுக்க எவ்வளவு காலமாயிருந்தாலும் சார்லிக்கு திருப்தியளிக்கவில்லை என்றால் உடனே அவை வெட்டப்பட்டன. தன் படங்களை அவர் தீவிரமாகச் செதுக்கினார்.

1936 ஆம் ஆண்டில் பெரும் பிரெஞ்ச் திரைப்பட இயக்குநர் ழான் கோக்டேவிடம் திரைப்படம் ஒரு மரத்தைப் போன்றது என்று சார்லி கூறினார். உலுக்கப்பட்டால் ஒட்டாமல் இருப்பதும், தேவையற்றது கீழே விழுந்து, தேவையான வடிவம் மட்டுமே மிஞ்சும். தேவைக்கு அதிகமானதெல்லாம் வெளியேறிய பின் ஒரு திரைப்படம் முழுமை பெறுகிறது.

எஸ்ஸனே, சாப்ளினை கடைசி வரை கோபமூட்டிக் கொண்டிருந்தது. வண்டி ஓட்டுநர்களைப் பற்றிக் கச்சிதமான இரண்டு ரீல் படத்தை உருவாக்கினார். ஆனால் கம்பனிக்காரர்கள் சார்லியின் மற்றப் படங்களில் இருந்து வெட்டப்பட்ட பகுதிகளை இணைத்து, அதை ஒரு முழு நீளப் படமாக்கி விட்டார்கள். அதன் விளைவு, அந்தப் படம் நினைக்க முடியாத அளவுக்கு குளறுபடியாகவே, .சார்லி அதிர்ச்சிக்குள்ளானார். காய்ச்சல் ஏற்பட்டது. இரண்டு நாட்கள் படுக்கையில் இருந்தார்.

(அடுத்த அரங்கில் தொடரும்)

# திரை விமர்சனம்

## வில்லன்



சமீப காலமாக தமிழ் சினிமாப்படங்கள் 'ரௌடியிசத்தை', தாதா கோஷ்டிகளை முன்னிலைப்படுத்தும் வகையிலான கதைகளையே கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் தற்போது வெளியாகியுள்ள படங்களில் ஒன்று அஜித்குமாரின் 'வில்லன்'. 'ஆசை'யிலிருந்து இதுவரை மென்மைத் தன்மையான பாத்திரங்களில் நடித்த தான், இப்படத்தின் மூலம் புதுப் பரிமாணம் பெறுவதாக அஜித் கூறினாலும், அவரின் விசிறிகளுக்கு வில்லன் பெரிதாக எதையும் கொடுக்கவில்லை.

நகரில் சாதாரண பஸ் நடத்துநர், அத்துடன் அதிரடி கொள்ளைக்காரன், கொள்ளைக்காரன் ஆனமைக்கு சோகமான பின்னணி என்று கதை நகர்கின்றது. விறுவிறுப்புக்குக் குறைவில்லை. ஊனமுற்றவராக பொலிசாரிடம் நடித்து, பின் சாதாரண மனிதனாக தனது கை, கால்களை மாற்றிக்கொண்டு மெதுவாக நடந்து செல்லும் அறிமுகக் காட்சி அஜித்திடம் உள்ள திறமையை வெளிக்காட்டவே செய்கிறது. எனினும், அவரின் முழுத்திறமையை இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் முழுமையாக இப்படத்தில் வெளிக்காட்டத் தவறிவிட்டார் போன்றே தெரிகிறது.

'ரொபின்ஹூட்' போன்ற ஆங்கிலக் கதையம்சத்தை நினைவுபடுத்துவதாக அமையும் இக்கதையோட்டம், தமிழ் சினிமாவுக்கேயுரிய சொதப்பல்களையும் அதிகமாகவே கொண்டிருக்கிறது. 'வில்லன்', கதையோட்டம்- அஜித் தனது முன்னைய சிறுபிராய கதையை விபரிக்கத் தொடங்கும்போதே, புதுத் திருப்பம் பெறுகிறது. உணர்ச்சிமிக்கதான அவரின் இளம்பிராயம் - தனது ஊனமுற்ற தம்பியாரைக் காப்பாற்ற அவர் படும்பாடு - என்பன உருக்கமாகச் சொல்லப்படுகிறது. இயக்குநர் ரவிக்குமார் இந்தப் பகுதியை கச்சிதமாகவே செய்துள்ளார்.

வில்லனின் வில்லன்- பெப்சி விஜயன் நடிப்பும் பாராட்டக்கூடிய வகையில் உள்ளது. சிறுபிள்ளைகளை பிச்சை எடுக்க வைக்க செய்யும் கொடூரம் மனதை நெருடுகிறது. (உண்மையாக நடப்பவை தான்) இந்தி இறக்குமதி நடிகை 'கிரண்' படம் முழுவதும் கவர்ச்சிக்காகவே வருகிறார். நடிப்பைத் தவிர ஏனைய எல்லாவற்றையும் செய்கிறார். இதுவே 'வில்லனின்' தாக்கத்தை குறைக்கவும் செய்கிறது. மீனாவும் கறிவேப்பிலை போல்தான் இப்படத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றார். நடிப்பை வெளிக்காட்டக்கூடிய பாத்திரமாக அது இல்லை என்பதே உண்மை. அஜித்தின் நண்பனாக வரும் ரமேஷ் கண்ணாவின் நகைச்சுவை உயிரோட்டமாக இருக்கிறது. லொடுக்கு பாண்டியின் அப்பாவித்தனமான நகைச்சுவை வயிறு குலுங்க வைக்கிறது.

பாடலிசை வித்தியாசாகரின் கைவண்ணத்தில் இரசிக்கக்கூடியதாக இருந்தாலும், பாடல் காட்சிகள் சகிக்க முடியாதவை. மொத்தத்தில் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாரின் மற்றுமோர் மசாலா படம். வழமை போலவே, இறுதிக் காட்சியில் அவரும் வந்து தலையைக் காட்டி விட்டுச் செல்கிறார்.

-துஷி

# உணர்வுகள்

உணர்வுகளைப் பற்றிக் கூறும்பொழுது கேள்வி எழலாம். கோபம், பொறாமை, குரோதம், பயம் போன்ற உணர்வுகள் ஏற்படுவது சரியா? இப்படிப்பட்ட உணர்வுகளை எமது மனதில் பதிய வைப்பது பிழையானதல்லவா? என்ற கேள்விகளுக்கு விடை தருவதற்கு முன்பு, உணர்வுகள் உருவாகுவது எவ்வாறு என்று நோக்குவோம்.

மனிதனுக்குப் பல தேவைகள் உண்டு. உணவு, பானம், இளைப்பாறுதல் போன்ற சரீரத் தேவைகளைக் கூறலாம். இத்தேவைகள் சரியான விதத்தில் கிடைக்கும்போது திருப்தி, சந்தோஷம் போன்ற

## சரியா? பிழையா?

உணர்வுகள் ஏற்படுவதோடு, இத்தேவைகள் பூர்த்திசெய்யப்படாமல் இருக்கும்போது இதைவிட வேறுபட்ட உணர்வுகள் உருவாகும். உதாரணமாக உணவு கிடைக்காதபோது, பசி உணர்வு ஏற்படும். இளைப்பாறுதல் கிடைக்காதபோது, களைப்புணர்வு ஏற்படும். சரீரத் தேவைகளைவிட எமக்குப் பாதுகாப்புத் தேவையும் உண்டல்லவா? பணம் இல்லாமல் போகும்பொழுது, வாழ்வதற்குப் பிரச்சினைகள் வரும்போது, பாதுகாப்புத் தேவை நிறைவேற்றப்படாதபோது- பய உணர்வு ஏற்படும். கௌரவத்தேவை நிறைவேறாது போகும்போது தாழ்வான உணர்வு, மற்றவர்கள் குறைவாக எனை மதித்தார்கள் என்ற உணர்வும் ஏற்படும். சமுதாயத்தேவை நிறைவேற்றப்படாதபோது முழுமையில்லாத தனிமை, புறக்கணிப்புணர்வு ஏற்படும். சுதந்திரமாகச் செயற்பட முடியாதபோது, கலக்கம் ஏற்படும்.

இவ்வாறு நோக்கும்பொழுது எமது உணர்வுகள்- எமது தேவைகளோடு தொடர்புபட்டதாக உள்ளன. வெளியில் அல்லது உள்ளே ஏற்படும் உத்வேகத்தால் இயற்கையாகத் தோன்றும் பிரதிச்செயலே உணர்வாகும். பசி உணர்வு, உள்ளான உத்வேகத்தின் பிரதிச்செயலாகும். பயம் என்பதே, பெரும்பாலும் வெளியே தோன்றும் உத்வேகத்தின் பிரதிச்செயலாகும். கோபமும் அவ்வாறே. கோபம், பயம் அல்லது வேறு எந்த உணர்வானாலும் எமது அனுமதியைப் பெற்று எம்மில் தோன்றுவனவல்ல. இவைகள் இயற்கையாகவே தோன்றுகின்றன.

ஆகவே, உணர்வுகள் ஏற்படுவதற்கு நாம் பொறுப்பெடுப்பது கடினமானதாகும். ஆதலால் உணர்வைச் "சரி" அல்லது "பிழை" என்று தீர்ப்பிட முடியாது. எமது விருப்பத்தோடு ஏற்பட்ட செயல்களையே தீர்ப்பிடமுடியும்.

(அடுத்த வாரம் தொடரும்)

- எஸ்.ஜே. யோகராஜா

# விலங்குகள் உலகம்

## ஓநாய்கள்





ஓநாய்களில் முக்கியமான இரு இனங்கள் மட்டுமே உண்டு. ஆண் ஓநாய் 2 மீற்றர் நீளமானது. 20 முதல் 80 கிலோ நிறை கொண்டது. சாம்பல் மற்றும் மண்ணிறங்களே இவற்றின் பிரதான நிறங்கள். உடலின் கீழ்ப்பகுதி மஞ்சள் கலந்த வெள்ளையாக இருக்கும்.

நாய் குடும்பத்தின் மிகப் பெரிய காட்டுஇனமான ஓநாய் **(Canislupus)** உலகம் முழுவதும் பரந்து காணப்படும்.

தந்திரமான இவ்விலங்குகள் சமூக வாழ்வைக் கொண்டவை. ஒரு குழுவிற்கு ஒரு ஆணும் பெண்ணும் தலைமை தாங்கும். மலைப்பகுதி குகைகளினுள் ஆறு முதல் ஏழு குட்டிகளை ஒரே தடவையில் ஈனக் கூடியது.

## தட்டை முதுகு ஆமைகள்

(Chelonia Depressa)





இந்தவகை ஆமைகள் ஒரு மீற்றர் நீளம்வரை வளரக் கூடியவை. ஓடு, பழுப்புப்பச்சை நிறமான தட்டையாகப பரந்து காணப்படும். அவுஸ்ரேலியாவின் வடக்கு மற்றும் கிழக்கு கடற்கரைகளில் காணலாம். சமுத்திரத்தில் வசிப்பவையாயினும் அதிகமாக ஆழம்குறைந்த கரைப்பகுதிகளிலேயே காணப்படும்.

மாமிச பட்சனிகளான இவை கடல் அனிமனிகள், இறால்கள் மற்றும் கடல் மெல்லுடலிகளை உண்பவை. அதிகமான தனது நேரத்தை கடற்கரை மணல் வெய்லில் காய்வதிலேயே கழிக்கும்.

ஆமை இனங்களில் இதன் முட்டையே மிகப் பெரியது. வருடத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஒரே தடவையில் 50 முட்டைகளை இடும். இந்த ஆமை இனங்கள் வேட்டையாடப்படுவதால் அருகிவருகின்றன.

## பென்குயின் பறவை

(Pygoscelis adeliae)





பென்குயின் பறவைகள் 70 சென்ரிமீற்றர் வரை வளரக்கூடியவை. நான்கு கிலோ நிறையுடையவை. வெள்ளை நிறத்திலான வயிற்றுப்புறமும் இறக்கையும கொண்டவை. முதுகுப்புறம் கறுப்பு நிறத்தில் காணப்படும். தென் துருவத்தை அண்டிய தீவுகளில் பனிப்பகுதிகளில் வசிப்பவை.

கடல் மெல்லுடலிகளை உண்பவை. எனினும், பிடித்தமான உணவு மீன்தான். நீரின் 20 மீற்றர் ஆழத்திலேயே இந்த மீன்பிடி நடக்கும். எனினும் 175 மீற்றர் ஆழம் வரை அமிழ்ந்து செல்லக்கூடிய திறன் பெற்றவை. குளிர்காலப்பகுதியை கடற்கரையிலேயே கழிக்கும்.

ஆயிரக்கணக்கில் கூட்டமாக வசிப்பவை. இனப்பெருக்கக் காலம் ஒக்டோபர். ஆணும் பெண்ணுமாக முட்டைகளை அடைகாக்கும்.

## துருவக் கரடி

(Ursus martimus)

துருவக் கரடிகள் 25 வருட காலம் வாழக் கூடியவை. ஆண் 240 முதல் 260 செ.மீ வரை நீளமான உடலமைப்புக் கொண்டது. பெண் 190 முதல் 210 செ.மீ வரை நீளமான உடலமைப்பைக் கொண்டது. ஆண் நிறை 400-600 கிலோவும், பெண் 200-300 கிலோ. இவை தரையில் வாழும் மிகப்பெரிய மாமிசபட்சணிகள். வடதுருவம், கனடா போன்ற பகுதிகளில் காணப்படும். பின்கால்களை விட முன்கால்கள் நீளமானவை. பனி மீது நடக்கக்கூடிய வகையில் தட்டையான பாதங்கள். நீரையண்டிய பனிப்பாறைகளில் வசிப்பவை.



மாமிசபட்சணிகளான இவை, சீல் (கடல் சிங்கங்கள்) எனும் கடல் வாழ்விலங்கை வேட்டையாடி உண்பவை. இந்த சீல் கடலுக்கடியிலிருந்து வெளியே சுவாசிக்க வரும்வரை காத்திருந்து, வெளியே வரும்போது அதிரடியாக அவற்றை பிடித்துகொண்டு உண்பதே இவற்றின் வேட்டைத் திறன்.





நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

- *திருக்குறள்*

# நமது நோக்கு

## ஒரு வரலாற்றுப் பணியின் தொடக்கம்

போரினால் சிதைவுற்றிருக்கும் வடக்கு, கிழக்குப் பகுதிகளைக் கட்டியெழுப்புவதற்கான - மிக முக்கிய பணியின் ஆரம்பம் கிளிநொச்சியில் நடைபெற்றிருக்கின்றது.

வடக்கு, கிழக்கிலுள்ள உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுச் செயலகம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருப்பது - போரின் பாதிப்புக்களைக் களையும் நடவடிக்கைகளில் ஒரு மைல்கல் என்பதில் சந்தேகமில்லை.

நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் தெரிவித்துள்ளதுபோல் - யுத்தத்தால் அழிந்து போன வட-கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு, இந்த செயலக அங்குரார்ப்பணம் யுத்த வரலாற்றில் ஒரு மகத்தான திருப்பம் என்பதை நிருபிப்பதாக - செயலகத்தின் செயற்பாடுகள் பெருமளவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

வட-கிழக்கைப் புனரமைப்பது என்பது இலகுவான பணியாக அமையப்போவதில்லை என்பதும்- மிக ஆழமான, நீண்ட பிரயத்தனங்களும் அர்ப்பணிப்புடனான சேவையும் இனிமேல் தேவைப்படுவதும் அவசியமானதாகும்.

போரின் தாக்கங்கள் என்பது - வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், இந்த மண்ணின் ஒவ்வொரு அணுக்களிலும் ஊடுருவியே இருப்பதும், வட-கிழக்குப் பிராந்தியத்தை சராசரி வளர்ச்சி நிலையிலிருந்து, மிகப் பின்தங்கியதாக ஆக்கியிருப்பதும் கண்கூடாகவே தெரிகின்ற நிலையில் -

வட-கிழக்கை மீளப் புனரமைப்பது தொலை நோக்குடனும் - அதேவேளை, மிகத்துரிதமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டியதாகின்றது.

மறுபுறம், சமாதானத்தின் விளைவுகள், மக்களை நேரடியாகச் சென்றடைவதற்கான ஊடகமாகவும் உபகுழுச் செயலகம் செயற்படவுள்ளது.

வெளிநாட்டு அரசாங்கங்களும், தொண்டர் நிறுவனங்களும் வழங்கவுள்ள நிதியைச் சரியான முறையில் வழிப்படுத்தும் பொறுப்பும், திட்டங்களை கொண்டு செலுத்துவதும் - கண்காணிக்கும் கடமையும் உபகுழுச் செயலகத்திலேயே தங்கியுள்ளது.

இந்த வகையில் - பாரிய பொறுப்பையும், வரலாற்றுக் கடமையையும் தன்னகத்தே தாங்கிநிற்கும், வடக்கு-கிழக்கிலுள்ள உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுச் செயலகம், மக்களுக்கு சமாதானத்தின் பெறுதிகளைப் பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை.

செயலகத்தின் பணிகளில் முதன்மையானவையாக -இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றமும், பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகளுக்கான நலத்திட்டங்களும், சுயதொழில் வேலைவாய்ப்பும் இடம்பெற்றிருப்பது இந்தவகையில் குறிப்பிடத்தக்க வேண்டியதாகும்.

அமைதி முயற்சிகளை உறுதிப்படுத்தக்கூடியதாகவும், வலுவூட்டக் கூடியதாகவும் அபிவிருத்திப் பணிகளது பங்கு அமைந்திருக்கும்போது - மனிதாபிமான புனர்வாழ்வுப் பணிகளுக்கான உத்தியோகபூர்வ ஆரம்பம், நிரந்தர அமைதியை நோக்கிய இன்னுமொரு காலடி என்றே கொள்ளமுடியும்.

அதேவேளை- கடந்த காலங்களில் அபிவிருத்தி, புனர்வாழ்வு என்ற பெயரில் நடைபெற்ற, பெரும் மோசடிகளுக்கும் ஊழல்களுக்கும் இடந்தராத, செம்மையான நிர்வாகக் கட்டமைப்பை, கண்காணிப்பை, அமைவிடத்தை- இச்செயலகம் கொண்டிருப்பதும் இன்னுமொரு முக்கிய விடயமாகும்.

வட-கிழக்கின் அனைத்து அபிவிருத்திப் பணிகளும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்படுமிடத்து - வீண் காலதாமதம் தவிர்க்கப்படுதல், தகுந்த முன்னுரிமை, துரிதபணி, கவனக்குவிப்பு, ஒரே பணியில் பல்வேறு நிறுவனங்களின் சேவைகளும் மேவிச் செல்வதை இழிவாக்குதல், இரட்டைத் தன்மையைத் தவிர்த்தல் என்றவாறு வினைத்திறன் மிக்க செயற்பாடுகளையும் மக்கள் இனி எதிர்பார்க்க முடியும்.

ஒட்டு மொத்தத்தில் - வட கிழக்கின் சமூக, பொருளாதார புனரமைப்போடு ஒருமித்த இலக்கு நோக்கிய பாதையில் வடக்கு கிழக்கு முழுவதையும் அழைத்துச் செல்லும் எதிர்காலச் செயற்பாடுகளுக்கு முதற்படி கிளிநொச்சியில் ஆரம்பாகியுள்ளது என்றே சொல்லலாம்.

## 'நாங்கள் ஹெலியில் நீதிமன்றம் போவோம்'

# பைலா பாடிய ஜிப்சி பாடகர் சுனில் மீது ரத்வத்த மகன் ஹோட்டலில் தாக்குதல்!

(கொழும்பு நிருபர்)

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடந்த இசை நிகழ்ச்சியொன்றின்போது பாடகர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின்பேரில் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் மகன் மஹேல ரத்வத்தவைக் கைதுசெய்ய விசேட பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஹில்டன் ஹோட்டலில் நடந்த இசை நிகழ்ச்சியொன்றில் பிரபல இசைக்குழுவான 'ஜிப்ஸி'யின் பாடகர் சுனில் பெரேரோ பாடல் ஒன்றைப் பாடியிருந்தார். சிங்களப் பாடல் ஒன்றில் மாற்றங்களைச் செய்து "நாங்கள் நீதிமன்றத்துக்கு ஹெலியில் போவோம், கூடுதலான மின் வெட்டை அமுல் செய்தது நாங்களே" என்ற கருத்திலான பைலா பாடல் ஒன்றைப்பாடியிருந்தார்.

இதன் பின்னர் இவர் கழிப்பறைக்குச் சென்றபோது, அங்கு மஹேல ரத்வத்த, பாடகர் சுனில் பெரேராவைக் கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனையடுத்து சுனில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு பொலிஸ் நிலையத்திலும் புகார் செய்திருந்தார்.

இதையடுத்து மஹேல ரத்வத்தவைக் கைது செய்யப் பொலிசார் முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அவரது இருப்பிடம் தெரியாததால் அம்முயற்சி தோல்வியில் முடிந்தது.

எனினும், அவரை எப்படியும் கைது செய்ய விசேட பொலிஸ் குழு முயற்சிக்கும் என, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எல்.திஸநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை - தனது மகன் பாடகரைத் தாக்கிய சம்பவத்தை ஊடகங்கள் திரிபுபடுத்தி விட்டதாக ஜெனரல் அனுருத்த ரத்வத்த குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனது மகன், ஏன் எனது தந்தையை இழிபுபடுத்துகிறீர்கள் எனக் கேட்டதற்கு, பாடகர் சுனில் பெரேரா - நீ யார் நரகமே அதைக் கேட்பதற்கு எனப் பதிலளித்ததால், பிரச்சினை தீவிரமானதாக ரத்வத்த தனது தரப்பில் தெரிவித்துள்ளார்.

### கல்வியியற் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும்

## சித்திரபாடம் கற்றவர்களுக்கு அனுமதியில்லாததால் விசனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2003 ஆம் ஆண்டுக்கான நாடகமும் அரங்கியலுக்குமான கற்கை நெறிக்கு மாணவர்களை அனுமதிக்கும்போது, க.பொ.த. சாதாரணதரத்தில் சித்திரப் பாடத்தை கற்ற மாணவர்கள் தெரிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கற்கை நெறிக்கு க.பொ.த.சாதாரண தரத்தில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களை கற்ற மாணவர்களே அனுமதிக்கப்பட்டதால், சித்திரத்தைக் கற்ற மாணவர்கள் பலர் தமக்கு அனுமதி கிடைக்காததையிட்டு விசனம் தெரிவித்தனர்.

# எமது தீர்வுப் பெட்டகத்தைத் தழுவிய சமாதானப் பேச்சையே ஆதரிப்பேன்!

## ஜனாதிபதி சந்திரிகா ஆதரவாளரிடையே பேச்சு



(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி 2000 ஆம் ஆண்டில் வெளியிட்ட தீர்வுப் பெட்டகத்தின் அடிப்படையில் அமையும், தீர்வை நோக்கியதான சமாதானப் பேச்சுவார்த்தைகளையே தான் ஆதரிக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களைப் பிரதேச ரீதியாக சந்தித்து வரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அனுராதபுரத்தில் கட்சி ஆதரவாளர்களிடையே பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசும்போது, இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுப் பெட்டகமே சிறந்ததொரு அடித்தளமாகும்.

எனவே, அதனைப் பின்பற்றுவதே பொருத்தமுடையதாக இருக்கும் எனவும் கூறினார்.

## புத்தளத்தில் பெரும் மழை 500 வீடுகள் வெள்ளத்தில்!

(கொழும்பு நிருபர்)

புத்தளம் பகுதியில் பெய்தகடும் மழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கின்றது.

24 மணி நேரத்தில் பெய்த கடும் மழையினால் 500 வீடுகள் நீரால் நிரம்பியிருக்கின்றன. அத்துடன், நான்கு இடம்பெயர்ந்தோர் முகாம்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து இப்பகுதியில் மழைபெய்து வருவதால் மேலும் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

## பிரதமரின் செயலாளர் லாலித யாழ். நிலையை அவதானிப்பு

(நமது நிருபர்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற அலுவல்களுக்கான செயலாளர் சமன் லாலித இரு தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

இவர் அமைச்சர் மகேஸ்வரனுடன் சேர்ந்து குருநகர் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்கு நேரடியாகச் சென்றதுடன், அங்கு கடற்றொழிலாளர்கள் சந்திக்கும் சோதனைகள், கட்டுப்பாடுகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

பிரதமரின் செயலாளருடன் உயரதிகாரிகள் குழுவொன்றும் யாழ்ப்பாணம் வந்திருந்தது.

(க,லி)

## இரு சிறுபான்மையினருக்கு உபஜனாதிபதி பதவிகள்?

(கொழும்பு)

சிறுபான்மை இனமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இரண்டு உபஜனாதிபதி பதவிகளை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதாக சிங்களத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. புதிய அரசியலமைப்பில் இத்திட்டம் முன்மொழியப்படலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்படும் இந்த இரண்டு உபஜனாதிபதிகளும் நாடாளுமன்றத்தை விட மற்றுமோர் சபையான இரண்டாவது சபையைக் கட்டுப்படுத்துபவர் எனவும், இந்த இரண்டாவது சபை மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுக்கும் இடையில் இணைப்புச் சபையாக செயற்படும் எனவும் அப்பத்திரிகை கூறுகிறது.

# பொன்னாலையில் மீளக்குடியமர்வை முன்னெடுக்க மக்கள் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் மீளக்குடியமர்வது பற்றிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் தொல்புரம் அரசினா மத்திய மருந்தக மண்டபததில் நடைபெற்றது.

கலந்துரையாடலைத் தொடர்ந்து மீளக்குடியமர்வு சம்பந்தமான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. "மக்கள் ஒன்றியம்" என்ற இக் குழுவில் 13 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கூட்டத்தின் நிறைவில் பல கோரிக்கைகள் அடங்கலான மகஜர் ஒன்று அரசாங்க அதிபருக்கு வழங்குவதெனவும் அதனுடைய பிரதிகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, பிரதேச செயலகம் மற்றும் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை ஆகியவற்றுக்கு அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மகஜர் அனுப்பியதிலிருந்து, ஏழு நாட்களுக்குள் தகுந்த பதில் கிடைக்காவிடில் மேற்படி ஒன்றியத்தினால் சங்கானை பிரதேச செயலகம் முன்பாக வெகுஜனப் போராட்டம் ஒன்று நடத்துவதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேற்படி மகஜரில் கோரிக்கைகள் பின்வருமாறு:-

☆ பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, அதனைச் சூழவுள்ள கிராமப்புறங்களில் ஆங்காங்கே இருக்கும் சகல முகாம்களும் அகற்றப்படவேண்டும்.

☆ வரதராஜப் பெருமாள் ஆலயம் தொடக்கம் திருவடி நிலைவரை நீண்டிருக்கும் சிறு சிறு காவலரண்கள் யாவும் திருவடிநிலைக்கு அப்பால் செல்ல வேண்டும்.

☆ பொன்னாலை கிராமத்தை ஊடறுத்துக் கொண்டு இளவாலைவரை தொடரும் மண் அணை மற்றும் முட்கம்பி வேலிகள் யாவும் அகற்றப்படவேண்டும்.

☆ பொன்னாலையில் பெரும்பாலான மக்கள் கடற்றொழிலாளர்கள். இவர்கள் கடற்றொழிலில் சுதந்திரமாக ஈடுபடுவதற்காக பாஸ் முறைகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்படல் வேண்டும்.

☆ பொன்னாலைக் கிராமம் பூராகவும் மிதிவெடிப் பரிசோதனை மேற்கொள்ளல் வேண்டும்.

☆ கடற்படையினரால் மூடி வைக்கப்பட்டிருக்கும், பொன்னாலையிலிருந்து சுழிபுரம் நெல்லியான் சந்தியைத் தொடும் வீதி மக்கள் பாவனைக்காக உடனடியாகத் திறக்கப்பட வேண்டும்.

☆ கோரிக்கைகள் யாவும் நிறைவேறும் பட்சத்தில் இராணுவம் வெளியேறிய சூழலில், அடிப்படை வசதிகளுடன் மீளக்குடியமர்வு இடமபெறவேண்டும்.

என்று அக்கூட்டத்தில் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - 2002

**தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்தின் கீழ், கடன் கொடுத்தவர்களில் - குலுக்கல் மூலம் மேலும் இரண்டாயிரத்து நானூறு பேரின் பெயர் விவரங்களை, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வெளியிட்டுள்ளது.**

**இக்கடன் மீளலுக்குத் தெரிவானோர் விவரம் வருமாறு:-**

## நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

001). யா/ந/24 திரு. நல்லதம்பி மகாலிங்கம்
002). யா/ந/79 திரு. தம்பிஜயா சிவலோகநாதன்
003). யா/ந/112 திரு. தாமோரம்பிள்ளை முத்தையா
004). யா/ந/252 திரு. அப்பாத்துரை நவரத்தினம்
005). யா/ந/335 திருமதி. கனகாம்பிகை சந்திரசேகரம்
006). யா/ந/590 திரு. பொன்னம்பலம் மாணிக்கவாசகர்
007). யா/ந/629 திருமதி. சகுந்தலா பரமநாதன்
008). யா/ந/740 திரு. செல்லப்பா நடராசா
009). யா/ந/765 திரு. இலட்சுமணர் ஒய்காரமூர்த்தி
010). யா/ந/782 திரு. துரையப்பா பத்மநாதன்
011). யா/ந/814 திருமதி. தவமணி சோமசுந்தரம்
012). யா/ந/853 திரு. நடராசா சண்முகரத்தினம்
013). யா/ந/920 திரு. தம்பிராசா வேலுப்பிள்ளை பாலசிங்கம்
014). யா/ந/1033 திரு. தம்பையா சத்தீஸ்வரன்
015). யா/ந/1071 திரு. செல்லப்பா சிறீஸ்கந்தன்
016). யா/ந/1095 திரு. வேலுப்பிள்ளை துரைரட்ணம்
017). யா/ந/1132 திரு. பாலசுந்தரம் பாலசண்முகநாதன்
018). யா/ந/1197 திருமதி. கனகம்மா நவரத்தினம்
019). யா/ந/1246 திரு. செல்லத்துரை சிவஞானசுந்தரம்
020). யா/ந/1268 வைத்தியக் கலாநிதி. புஸ்பா சண்முகம்
021). யா/ந/1271 திரு. வைத்திலிங்கம் சிவலிங்கம்
022). யா/ந/1292 திரு. தங்கரத்தினம் நாகேந்திரம்
023). யா/ந/1306 திரு. காசியன் ஆறுமுகம்
024). யா/ந/1318 திரு. கணபதிப்பிள்ளை கனகரட்ணம்
025). யா/ந/1353 திரு. விசுவநாதர் சுப்பிரமணியம்
026). யா/ந/1428 திருமதி. தயாநிதி சிறீஸ்கந்தராசா
027). யா/ந/1445 திரு. சிவஞானம் ஜெகதீஸ்வரன்
028). யா/ந/1581 திரு. சிவப்பிரகாசம் குமாரசாமி
029). யா/ந/1624 திரு. கிருஷ்ணையர் நராயணசர்மா
030). யா/ந/1649 திரு. கந்தையா இரத்தினசபாபதி
031). யா/ந/1656 திரு.. கந்தையா இராசரத்தினம்
032). யா/ந/1658 திரு. செல்லத்துரை இராமநாதன்
033). யா/ந/1684 திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
034). யா/ந/1698 திரு. ஆறுமுகம் செல்வரட்ணம்
035). யா/ந/1726 திருமதி. தங்கமலர் சுந்தரலிங்கம்
036). யா/ந/1765 திருமதி. கமலாதேவி தனபாலசிங்கம்
037). யா/ந/1815 திரு. மாரிமுத்து சோமரத்தினம்
038). யா/ந/1821 திரு. பொன்னையா சண்முகராஜா
039). யா/ந/1828 திருமதி. தங்கலட்சுமி சங்கரலிங்கம்
040). யா/ந/1891 திரு. பத்மநாதக்குருக்கள் கோபாலகிருஷ்ணன்
041). யா/ந/1943 திரு. தம்பிப்பிள்ளை நடராஜா
042). யா/ந/1977 திரு. கிருஷ்ணசாமி பத்மநாதன்
043). யா/ந/2042 திரு. கந்தையா சுப்பிரமணியம்
044). யா/ந/2070 திரு. நாராயணலிங்கம் சந்திரமோகன்
045). யா/ந/2072 திரு. பண்டாரம் தவராசா
046). யா/ந/2096 திரு. தேவராஜா தெய்வேந்திரன்
047). யா/ந/2329 திரு. இரத்தினம் சிவலிங்கம்
048). யா/ந/2343 திரு. அய்யாத்துரை சண்முகநாதன்
049). யா/ந/2348 திரு. இராசையா சண்முகரத்தினம்
050). யா/ந/2356 திருமதி. தவமணி மாணிக்கவாசகர்
051). யா/ந/2461 செல்வி. தேவகி பாலகிட்ணர்
052). யா/ந/2462 திருமதி. யசோதராதேவி சிவகுமார்
053). யா/ந/2477 திருமதி. மாலினி கமலநாதன்
054). யா/ந/2519 திரு. துரையப்பா செல்லத்துரை
055). யா/ந/2542 திரு. தர்மலிங்கம் துரைராசசிங்கம்
056). யா/ந/2664 திருமதி. றேணுகாதேவி விசாகபவன்
057). யா/ந/2675 திரு. பூபாலசிங்கம் இராசேந்திரம்
058). யா/ந/2745 திருமதி. செல்லம்மா திருமேனி
059). யா/ந/2746 திரு. வேலுப்பிள்ளை தங்கவடிவேல்
060). யா/ந/2791 திரு. சின்னத்தம்பி ஆனந்தசுந்தரம்
061). யா/ந/2836 திருமதி. கமலாதேவி குமாரசாமி
062). யா/ந/2902 திருமதி. குகராணி பரமேஸ்வரன்
063). யா/ந/2930 திருமதி. வசந்தகுமாரி இரங்கநாதன்
064). யா/ந/2933 திருமதி. இராசமணி கனகசபாபதி
065). யா/ந/2981 திருமதி. சிவபாக்கியம் நாகமணி
066). யா/ந/3038 திரு. முடியப்பு அந்தோனிப்பிள்ளை
067). யா/ந/3087 திருமதி. ஜெயராணி அன்னலிங்கம்
068). யா/ந/3118 திரு. சின்னையா கந்தசாமி
069). யா/ந/3205 திருமதி. இரத்தினேஸ்வரி தர்மலிங்கம்
070). யா/ந/3232 திருமதி. மனோன்மணி இராசநாயம்
071). யா/ந/3284 திரு. இராசா செல்லமாணிக்கராசா
072). யா/ந/3332 திரு. காசிப்பிள்ளை துரைசிங்கம்
073). யா/ந/3352 திரு. முத்தையா தியாகராசா
074). யா/ந/3354 திருமதி. தியாகேஸ்வரி தில்லையம்பலம்
075). யா/ந/3385 திருமதி. பூரணம் யோகசேகரம்
076). யா/ந/3417 திருமதி. இரத்தினேஸ்வரி பத்மநாதன்
077). யா/ந/3444 திரு. சின்னையா அப்பையா
078). யா/ந/3528 திரு. பொன்னையா சிவஞானம்
079). யா/ந/3550 திருமதி. மகேஸ்வரி செல்லத்துரை
080). யா/ந/3561 திரு. தம்பிப்பிள்ளை பரஞ்சோதி
081). யா/ந/3586 திருமதி. நஞ்சிதமலர் குணரத்தினம்
082). யா/ந/3601 திரு. ஐயாத்துரை ஜெயரட்ணம்
083). யா/ந/3605 திருமதி. கமலேஸ்வரி இராசசிங்கம்
084). யா/ந/3620 திரு. இரத்தினம் செல்வராசா
085). யா/ந/3637 திருமதி. அன்னலட்சுமி இரத்தினம்
086). யா/ந/3674 திரு. பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம்
087). யா/ந/3681 திருமதி. கமலராணி தர்மலிங்கம்
088). யா/ந/3685 திரு. கார்த்திகேசு முத்துராசா
089). யா/ந/3711 திருமதி. ஜெயந்தி கனகசபாபதிசர்மா
090). யா/ந/3744 திரு. கந்தைய்யா பூபாலசிங்கம்
091). யா/ந/3745 செல்வி. வாசுகி தியாகராசா
092). யா/ந/3786 திருமதி. பரமேஸ்வரி பரமேஸ்வரன்
093). யா/ந/3999 திரு. இராசையா பொன்னம்பலவாணர்
094). யா/ந/4023 திரு. வேலுப்பிள்ளை சின்னத்துரை
095). யா/ந/4095 திரு. நல்லதம்பி நடேசன்
096). யா/ந/4117 திரு. கார்த்திகேசு சவுந்தரராஜா
097). யா/ந/4231 திருமதி., சிவபாக்கியம் சின்னராசா
098). யா/ந/4237 திரு. தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம்
099). யா/ந/4257 திரு. விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம்
100). யா/ந/4428 திரு. அப்பையா பொன்னுத்துரை
101). யா/ந/4453 செல்வி. ஜெயசங்கரி இரவீந்திநாத்
102). யா/ந/4474 திரு. நடராசா சச்சிதானந்தம்
103). யா/ந/4486 திருமதி. நாகேஸ்வரி சிவராஜா
104). யா/ந/4505 திரு. இராசலிங்கம் சோதிநாதன்
105). யா/ந/4509 திருமதி. கமலாதேவி சண்முகம்பிள்ளை
106). யா/ந/4573 திரு. அருமைத்துரை செல்வராஜா
107). யா/ந/4629 திரு. சுப்பிரமணியம் குலசிங்கம்
108). யா/ந/4677 திருமதி. தவமணிதேவி சண்முகலிங்கம்
109). யா/ந/4686 திரு. தம்பையா தம்பிநாதன்
110). யா/ந/4809 திருமதி. கமலாசனி இராசையா
111). யா/ந/4818 திருமதி. செல்லம்மா அம்பலவாணர்
112). யா/ந/4868 திரு. சின்னத்தம்பி செல்லப்பா
113). யா/ந/4905 திருமதி. பாரததேவி வன்னியசிங்கம்
114). யா/ந/4929 திரு. கணபதிப்பிள்ளை தயாபரன்
115). யா/ந/4943 செல்வி. குமுதினி நாகேஸ்வரன்
116). யா/ந/4970 திருமதி. கமலாதேவி இராசநாயகம்
117). யா/ந/5003 திரு. முத்துத்தம்பி சிவசுப்பிரமணியம்
118). யா/ந/5097 திருமதி. 'பாக்கியம் கந்தையா
119). யா/ந/5222 திருமதி. தெய்வானைப்பிள்ளை வைரவிப்பிள்ளை
120). யா/ந/5228 திருமதி. ஞானபூரணம் இராசையா
121). யா/ந/5269 திருமதி. றஞ்சனாதேவி பிறேமகுமார்
122). யா/ந/5290 திருமதி. சோதிப்பிள்ளை சற்குணானந்தசோதி
123). யா/ந/5357 திரு. கந்தையா சிவசுப்பிரதாஸ்
124). யா/ந/5364 திரு. குழந்தைவேலு இராமச்சந்திரன்
125). யா/ந/5423 திருமதி. விஜயராணி விவேகானந்தன்
126). யா/ந/5485 திரு. கதிரவேலு பரமானந்தம்
127). யா/ந/5488 திரு. பரமநாதன் சோதிநாதன்
128). யா/ந/5545 செல்வி. பிறேமலதா சிவப்பிரகாசம்
129). யா/ந/5560 திரு. வேதநாயகம் சோமசுந்தரம்
130). யா/ந/5574 திருமதி. தங்கபூமணி துரைராசா
131). யா/ந/5578 திரு. கதிரத்தம்பி கந்தையா
132). யா/ந/5587 திருமதி. அன்னபூரணி செல்வரத்தினம்
133). யா/ந/5588 திருமதி. நித்தியானந்ததேவி தெய்வேந்திரன்
134). யா/ந/5596 செல்வி. மதிமளா திருநாவுக்கரசு
135). யா/ந/5607 திருமதி. சசிதேவி சிவசிதம்பரம்
136). யா/ந/5622 திருமதி. இலங்காதேவி வேலுப்பிள்ளை
137). யா/ந/5674 திருமதி. யோகேஸ்வரி இராசையா
138). யா/ந/5682 திரு. சீனிவாசகம் ஆனந்தசுந்தரம்
139). யா/ந/5697 திரு. செல்லத்துரை கமலநாதன்
140). யா/ந/5712 திருமதி. பரமேஸ்வரி திருநாவுக்கரசு
141). யா/ந/5792 திருமதி. சறோஜகுமாரி வசந்தகுமாரன்
142). யா/ந/5834 திரு. பொன்னுத்துரை ஜனகன்
143). யா/ந/5869 திருமதி. வினோதினி சிறிஸ்கந்தராசா
144). யா/ந/5902 திரு. சேதுபதி கந்தையா படிகலிங்கம்
145). யா/ந/5964 திரு. வெற்றிவேலு கிருஷ்ணபிள்ளை
146). யா/ந/5992 திரு. நல்லசேகரம் கனகரத்தினம்
147). யா/ந/6018 திரு. முத்தையா சண்முகம்
148). யா/வெ/1283திரு. சரவணமுத்து பரமநாதன்
149). யா/வெ/1284திரு. ரவி உதயமன்
150). யா/வெ/1285திரு. இராஜசிங்கம் பகவத்சிங்கம்
151). யா/வெ/1293திருமதி. நாகேஸ்வரி பரமலிங்கம்
152). யா/வெ/1296செல்வி. விஜயநாகேஸ்வரி பாலசுப்பிரமணியம்
153). யா/வெ/1299திரு. தளையசிங்கம் தவனேஸ்
154). யா/வெ/1332திரு. சிவலை குணசேகரம்
155). யா/வெ/1335செல்வி. நிர்மலா சாமுவேல்
156). யா/வெ/1376திரு. சூசைப்பிள்ளை யேசுதாசன்
157). யா/வெ/1382திரு. தம்பிமுத்து சதாசிவம்
158). யா/வெ/1388திரு. மாரிமுத்து விஜயகுமார்
159). யா/வெ/1392திரு. ஜோசப் சுரேஸ்
160). யா/வெ/1393திருமதி. தேவரஞ்சிதமணி தம்பிராசா
161). யா/வெ/1400திருமதி. சிறிரஜனி சிவமூர்த்தி
162). யா/வெ/1405திரு. தம்பு கிருஸ்ணபிள்ளை
163). யா/வெ/1410திருமதி. மனோகரி வசந்தரூபன்
164). யா/வெ/1415திரு. சின்னத்தம்பி வீரசிங்கம்
165). யா/வெ/1427திருமதி. நாகேஸ்வரி சுப்பிரமணியம்
166). யா/வெ/1429திரு. இராமலிங்கம் மகேந்திரன்
167). யா/வெ/1439திருமதி. வரலட்சுமி நந்தகுமார்
168). யா/வெ/1460திரு. சுப்பிரமணியம் சண்முகராஜா
169). யா/வெ/1484திருமதி. தில்லை இராஜேஸ்வரி இராமலிங்கம்
170). யா/வெ/1492திருமதி. தையல்நாயகி கனகரத்தினம்
171). யா/வெ/1494திருமதி. தயாநிதி உதயகுமார்
172). யா/வெ/1496திருமதி. விஜயரஞ்சினி சத்தியபாஸ்கரன்
173). யா/வெ/1513திருமதி. பொற்கொடி கந்தசாமி
174). யா/வெ/1517திருமதி. இரத்தினேஸ்வரி துரையப்பா
175). யா/வெ/1582திரு. வடிவேல் விஜயரத்தினம்
176). யா/வெ/1635திரு. கணபதிப்பிள்ளை தம்பு

## யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு

001). யா/யா/46 திருமதி. சிவகுமாரி சந்திரகுமார்
002). யா/யா/99 திருமதி. விஜயலெட்சுமி கணேசமூர்த்தி
003). யா/யா/229 திரு. யோன் அருளப்பு அந்தோனிப்பிள்ளை
004). யா/யா/242 திரு. சுப்பிரமணியம் சண்முகானந்தன்
005). யா/யா/331 திருமதி. ஷோபனா தவத்துரை
006). யா/யா/380 திருமதி. கனகாம்பிகை தேவராசா
007). யா/யா/385 திருமதி. கருணாதேவி ஸ்ரீகாந்தா
008). யா/யா/481 திருமதி. தேவறஞ்சிதம் குமாரசாமி
009). யா/யா/513 திருமதி. மேரிதிரேசா யோசவ்அன்ரன்
010). யா/யா/515 திருமதி. ஜெயதேவி பிறைசூடி
011). யா/யா/543 திரு. மாரிமுத்து மகேஸ்வரன்
012). யா/யா/601 திரு. கோபாலபிள்ளை சிவகடாட்சம்
013). யா/யா/605 திரு. இரத்தினசிங்கம் தம்பிராசா
014). யா/யா/635 திரு. வையாபுரி பாலகிருஷ்ணன்
015). யா/யா/663 திரு. வடிவேல் சிவஞானம்
016). யா/யா/675 திரு. சுந்தரமூர்த்தி கண்ணன்
017). யா/யா/678 திருமதி. நித்தியலட்சுமி சோமசுந்தரம்
018). யா/யா/696 திரு. சின்னத்தம்பு மகாலிங்கம்
019). யா/யா/707 திரு. வெற்றிவேலு பாலசுப்பிரமணியம்
020). யா/யா/710 திருமதி. தங்கரத்தினம் தங்கராஜா
021). யா/யா/716 திரு. கணபதிப்பிள்ளை நவரத்தினம்
022). யா/யா/762 திருமதி. லோகேஸ்வரி கிருஷ்ணானந்தன்
023). யா/யா/863 திருமதி. தெய்வநாயகி தனபாலசிங்கம்
024). யா/யா/892 திருமதி. சாந்தகுமாரி செல்வரத்தினம்
025). யா/யா/908 திரு. நிக்கலஸ் செபஸ்தியாம்பிள்ளை
026). யா/யா/937 திரு. மரியாம்பிள்ளை மரியதாஸ்
027). யா/யா/996 திரு. தம்பு தங்கராஜா
028). யா/யா/1063 திரு. அன்ரனிப்பிள்ளை சீமாம்பிள்ளை
029). யா/யா/1178 திருமதி. சிவானந்தமணி சிவசுப்பிரமணியம்
030). யா/யா/1198 திருமதி. தங்கம்மா பத்மநாதன்
031). யா/யா/1305 திரு. யோன்பிள்ளை அலோசியஸ் அமிர்தநாயகம்
032). யா/யா/1339 திருமதி. நந்தினி கருணாகரன்
033). யா/யா/1442 திருமதி. பிரகாசியம்மா அருளப்பு
034). யா/யா/1482 திரு. செல்லையா நாகேந்திரன்
035). யா/யா/1515 திருமதி. வளர்மதி ஜெகன்நாதன்
036). யா/யா/1542 திரு. தம்பிரத்தினம் சத்தியானந்தன்
037). யா/யா/1551 திரு. கனகையா பரமேஸ்வரன்
038). யா/யா/1585 திருமதி. காஞ்சனாமலர் வன்மீகலிங்கம்
039). யா/யா/1599 திரு. துரைராஜா இராஜேஸ்வரன்
040). யா/யா/1603 திரு. மரியன் வின்ஸ்ரன் சிங்கநாயகம் சிறிராசா
041). யா/யா/1606 திரு. பிலிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
042). யா/யா/1646 திரு. மாணிக்கவாசகர் திருவாசகர்
043). யா/யா/1653 திருமதி. யோகம்மா துரையப்பா
044). யா/யா/1665 திரு. வீரசிங்கம் சண்முகலிங்கம்
045). யா/யா/1675 திரு. மனுவேல்பிள்ளை புஸ்பராஜா
046). யா/யா/1737 திருமதி. யவனாம்பிகை வரதராஜா
047). யா/யா/1802 செல்வி. லீலாஇரத்தினபூபதி நவரத்தினசிங்கம்
048). யா/யா/1841 திரு. கனகரத்தினம் கனகேஸ்வரன்
049). யா/யா/1847 திரு. செல்வரட்ணம் விஸ்வகாந்தன்
050). யா/யா/1918 திரு. அந்தோனிப்பிள்ளை யேசுதாசன் எட்மன்
051). யா/யா/1943 திரு. பற்றிக்பீற்றர் மரியநாயகம்
052). யா/யா/1985 திரு. மனுவேல்பிள்ளை வில்பிறெட்
053). யா/யா/1993 திரு. கயஸ்செபமாலை பிரான்சிஸ்
054). யா/யா/2044 செல்வி. யோஸ்பின் யோசேப்பு
055). யா/யா/2069 செல்வி. மகாலட்சுமி சிவப்பிரகாசம்
056). யா/யா/2074 திருமதி. ஜெயலதா புஸ்பராசா
057). யா/யா/2088 திருமதி. மகேஸ்வரி பஞ்சாட்சரம்
058). யா/யா/2099 திரு. அந்தோனிப்பிள்ளை செல்வராசா
059). யா/யா/2117 திரு. பிலிப் எமில்
060). யா/யா/2157 திரு. சுப்பிரமணியம் சண்முகவடிவேல்
061). யா/யா/2171 திருமதி. கமலாம்பிகை செல்லத்துரை
062). யா/யா/2225 திருமதி. அருளம்மா செல்லத்தம்பு
063). யா/யா/2269 திருமதி. சிவனேஸ்வரி மாயாசுதன்
064). யா/யா/2280 திருமதி. றாஜீவி பேரின்பராசா
065). யா/யா/2281 திருமதி. நாகேஸ்வரி ஜெயரட்ணம்
066). யா/யா/2324 திரு. எட்வின் குணரட்ணம் அந்தோனிப்பிள்ளை
067). யா/யா/2326 திருமதி. லில்லிபுஷ்பம் சேவியர்
068). யா/யா/2363 திருமதி. றூபினா விஸ்வநாதன்
069). யா/யா/2435 திருமதி. பெனிக்னா கொன்சன்ரைன்
070). யா/யா/2504 திரு. மேரி இமெல்டா அலோசியஸ்
071). யா/யா/2545 திரு. ஆசீர்வாதம் செகராசசிங்கம்
072). யா/யா/2563 திருமதி. கமலாவதி காசிப்பிள்ளை
073). யா/யா/2566 திருமதி. பேரின்பநாயகி இராஜேஸ்வரன்
074). யா/யா/2623 திரு. பொன்னம்பலம் தில்லைநாதன்
075). யா/யா/2626 செல்வி. கிறிஸ்ரீன்மாலினி மனுவல்பிள்ளை
076). யா/யா/2632 திருமதி. இன்பம் கந்தசாமி
077). யா/யா/2646 திருமதி. கனகாம்பிகை சபாரெத்தினம்
078). யா/யா/2655 திருமதி. தவமணி அருளானந்தம்
079). யா/யா/2662 திருமதி. இராசம்மா விஜயநாதன்
080). யா/யா/2742 திருமதி. அம்பிகா செல்வரெத்தினம்
081). யா/யா/2810 திருமதி. செல்லக்கண்டு சிவஞானம்
082). யா/யா/2849 திருமதி. நகுலேஸ்வரி சிவராஜா
083). யா/யா/2903 திரு. சிவலிங்கம் தியாகலிங்கம்
084). யா/யா/2926 திருமதி. அன்னம்மா கார்த்திகேசு
085). யா/யா/2990 திரு. முத்துக்குமாரசாமி உருத்திரன்
086). யா/யா/2999 திருமதி. சரஸ் ஜேம்ஸ்
087). யா/யா/3000 திரு. மூத்ததம்பி கந்தையா
088). யா/யா/3025 திருமதி. றீசா அரியமலர் அந்தோனிப்பிள்ளை
089). யா/யா/3094 திரு. பிலிப்பு பவுலீனப்பு
090). யா/யா/3140 திருமதி. லூர்த்தம்மா மரியதாஸ்
091). யா/யா/3165 திருமதி. திரேசம்மா செபமாலை
092). யா/யா/3171 திருமதி. மரியமலர் அருளப்பு
093). யா/யா/3215 திருமதி. மேரி ஜசிந்தா யோஜ்
094). யா/யா/3257 திருமதி. பில்லிஅன் ஆன்நமசிவாயம்
095). யா/யா/3288 திருமதி. சகாயராணி ஜெயசீலன்
096). யா/யா/3294 திருமதி. றெறன்சியா அன்ரனி
097). யா/யா/3330 திருமதி. மேரிமாகிலட் ஜெயராஜா
098). யா/யா/3339 திரு. சின்னத்தம்பி நாகராஜா
099). யா/யா/3378 திருமதி. கத்தரின் கொர்னலிஸ்
100). யா/யா/3396 திருமதி. அந்தோனியாப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை
101). யா/யா/3442 திரு. வெனிக்ளோஸ் லூவிஸ்
102). யா/யா/3497 திருமதி. சாரதா பீற்றசன்
103). யா/யா/3630 திரு. அருளானந்தம் மனோகரன்
104). யா/யா/3644 திரு. கந்தர் தவஸ்கந்தா

(தொடரும்)

# யாழ்ப்பாணத் திட்டத்தின் மீளாய்வு வேலைப் பட்டறையிலிருந்து...


ஜீ.ரீ.சற்.சர்வதேச ஆலோசகர் ஜே.கோனர்


அரச அதிபர் செ.பத்மநாதன்


புனர்வாழ்வு, புனரமைப்பு,அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சின் ஆணையாளர் சிவானந்தன்


புனர்வாழ்வு, புனரமைப்பு,அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சின் ஆலோசகர் சி.எஸ்.சண்முகலிங்கம்


மாகாணத் திட்டமிடல் பிரதம செயலாளர் என்.சுவாமிநாதன்

## கொத்தணியை ஒப்படைக்க நாளை முதல் மறியற்போர்

(வடமராட்சி)

திக்கம் வடிசாலையை, வடமராட்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் ஒப்படைக்கக்கோரி, நாளை முதல் தொடர்ச்சியாக பனை அபிவிருத்திச்சபையின் முன்பாக மறியல் போராட்டம் நடத்தப்போவதாக, கொத்தணி அறிவித்துள்ளது.

கொத்தணியால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டவுள்ள மறியல் போராட்டத்திற்கு- அச்சுவேலி, கரவெட்டி, பருத்தித்துறை, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. (ச)

## அபிவிருத்தித் திட்டப் பரிசீலனைக்கு யாழ்.செயலகத்தில் வேலைப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி தொடர்பாக துறை சார்ந்த குழுக்களால் வரையப்பட்ட திட்டங்களை மீள்பரிசீலிக்கும் முகமாக, நேற்று யாழ். செயலகத்தில் மூன்றுநாள் வேலைப்பட்டறை ஆரம்பமானது.

அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இவ்வேலைப்பட்டறை ஆரம்பமானது. திணைக்களத் தலைவர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் சர்வதேச ஆலோசகர் ஜெ.கோணா புனர்வாழ்வு - புனரமைப்பு, மீள்குடியேற்ற அமைச்சின் ஆணையாளர் சிவானந்தன், புனர்வாழ்வு- புனரமைப்பு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சின் ஆலோசகர் சி.எஸ்.சண முகலிங்கம், 'நியாப்' திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன், புனர்வாழ்வு மீள் குடியேற்ற அமைச்சின் ஆலோசகர் நடராசா, மாகாணத் திட்டமிடல் பிரதம செயலாளர் எஸ். சுவாமிநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, ஆனந்தசங்கரி ஆகியோர் உரையாற்றினர்.

இன்றும் நாளையும் தெரிவு செய்யப்பட்ட குழுக்கள், துறைசார்ந்த அபிவிருத்தி தொடர்பான திட்ட வரைபுகளை சமர்ப்பிக்கவுள்ளன.(60,ச)

## டக்ளஸின் கொடும்பாவி நெடுந்தீவில் எரிப்பு

(நெடுந்தீவு நிருபர்)

நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பி.யினரை வெளியேறக் கோரி, மக்களின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகி நேற்றுடன் 31 நாட்கள் நிறைவடைந்துள்ளது. இதனையொட்டி நேற்று மாலை 6 மணிக்கு, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, ஈ.பி.டி.பி. முகாமுக்கு 25 மீற்றர் தூரத்தில் வைத்து எரிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான நெடுந்தீவு மக்கள் கலந்து கொண்டனர். இதன்போது கலகங்கள் ஏதேனும் வெடிக்கலாம் என்ற அச்சத்தில், ஈ.பி.டி.பி. முகாமிற்கு கலகமடக்கும் பொலிஸார் பலத்த பாதுகாப்பினை வழங்கியிருந்தனர். (113)

## குடாநாட்டின் பிரதான வீதிகளில் பாதசாரிக் கடவைகள் அமைப்பு

(மானிப்பாய்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக வீதிப்போக்குவரத்து விபத்துக்கள் அதிகரித்து வருவதாக சமீபத்திய புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறான வீதிப் போக்குவரத்து விபத்துக்களைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

இந்தவகையில் பிரதான வீதிகள், சந்திகள், பாடசாலைகள் மற்றும் விபத்துக்கள் நடைபெற ஏதுவாக அமையும் சனநெரிசல் அதிகமாகவுள்ள இடங்களுக்கு முன்பாக பாதசாரிகளுக்கான மஞ்சள் கடவைகள் வீதிப் போக்குவரத்து அதிகார சபையினரால் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த மஞ்சள் கடவைகள் மூலம சாரதிகள் மட்டுமல்லாது, பாதசாரிகளும், மாணவர்களும் விபத்துக்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு பங்காற்ற முடியுமெனவும், வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்து, வீதி சமிக்ஞைகளை முறையாகப் பின்பற்றி, மஞ்சள் கோட்டுப் பகுதியினை மட்டுமே வீதியைக் கடக்க உபயோகிப்பதன் மூலம் விபத்துக்களைப் பெரும்பாலும் தவிர்க்க முடியுமென போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

(100)

## இனந்தெரியாத காய்ச்சலினால் ஒரு வயதுச் சிறுமி பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சமயம் அங்கு மரணமானார்.

புலோலி தெற்கு கம் பாவத்தையை சேர்ந்த சிவனேஸ்வரன் சிவரஞ்சனி என்ற ஒரு வயது சிறுமியே மரணமானவராவார்.

நேற்று முன்தினம், மந்திகை மருத்துமனையில் அனுமதிக்கப்பட்ட வேளை- இவர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டமை தெரியவந்தது. உடன் சிகிச்சைக்காக நோயாளர் விடுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது சிறுமி அங்கு மரணமானார்.

அதேவேளை, வடமராட்சி பிரதேசத்தில் இனந்தெரியாத காய்ச்சல் தொடர்ந்து பரவிவருவதனால், வைத்தியசாலை விடுதிகளில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச)

## கிழக்கு வாழ் முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்!

### பிரதமர் ரணில் உறுதி தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும அரசாங்க நடவடிக்கைகளின்போது, முஸ்லிம்களின் உரிமைகள் எவ்வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது என்று அவர் மேலும் கூறினார்.

கண்டியைச் சேர்ந்தத மடவளை மெதிருமு வித்தியாலயத்தில் நடைபெற்ற நபி விழாவில் பங்குபற்றிப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## மலேரியா நுளம்பு ஒழிப்புக்கு மருந்து விசிறல் ஆரம்பம்

தென்மராட்சி கிழக்கில் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதையடுத்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் இரசாயன மருந்து விசிறும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இவ்வாறு மருந்து விசிற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு சார்பில் தெரிவிக்கப்படுகிறது. (92)

## புரிந்துணர்வுடன் இருதரப்பினரும் செயற்படும் காலம் வந்துவிட்டது

### முன்னாள் ரூபவாஹினிப் பணிப்பாளர் வசந்தராஜா

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தித் தீர்வு காணுவதைத் தவிர, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வேறு மாற்று வழிகள் ஏதுமேயில்லை. தங்களது வாழ்வே சமாதானத்தில்தான் தங்கியிருக்கிறது என்பதை ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இவ்வாறு, ரூபாவாஹினியின் முன்னாள் பணிப்பாளர் வசந்தராஜா கருத்து தெரிவித்துள்ளார்.

கொழும்பு ராவய பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கும்போது-

விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள சுயாட்சித் திட்டத்துக்கு எதிராக எதுவுமே செய்யமுடியாது என்ற நிலையில் அரசாங்கம் இருப்பதை நாம் இப்போது காணமுடிகின்றது.

இனிமேலும் பாரிய பிரச்சனைகளை இரண்டு தரப்புக்களுமே வைத்துக் கொண்டிருக்க முடியாது. சகலவற்றுக்கும் முடிவு காணும் வேளை வந்து விட்டது. இரண்டு தரப்புமே ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையுடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட்டாக வேண்டியுள்ளது.

சர்வதேச சமூகத்தின் தலையீடானது, யதார்த்தத்தை விட்டு எவரும் பிரிந்து சென்று விடாதபடி கட்டி வைத்திருக்கின்றது. எனவே, வெற்றிகரமான, நடைமுறைச் சாத்தியமான முடிவுகள் கிடைக்கும் என்றே நான் எதிர்பார்க்கின்றேன்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக எவ்வளவோ உயிர்களைத் தியாகம் செய்து விட்டார்கள். அவர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டேயாக வேண்டும். வடக்குக்கும் தெறகுக்கும் தனித்தனியான நாடாளுமன்றங்கள் இருக்கக் கூடியதாகவேனும் தீர்வு கிடைக்க வேண்டும் என்றும் வசந்தராஜா மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதானப் பேச்சை ஆதரித்து அரசாங்கத்தின் பிரசார இயக்கம்

## ஜனவரியில் ஆரம்பமாகும்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் பற்றி, நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில், ஜனவரி முதல் அரசாங்கம் பிரசார இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

நாட்டில் பரவலாக எதிரணியினரால் பரப்பப்படும் விசமத்தனமான பிரசாரங்களை முறியடிக்கும் வகையில், அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் இதுவரை நடந்து முடிந்துள்ள பேச்சு வார்த்தைகள், அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், மூன்றாம் சுற்றின் இறுதியில் இணக்கம் காணப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பன தொடர்பாக மக்களுக்கு விழிப்பை ஏற்படுத்தி அறிவூட்ட இப்பிரசார இயக்கம் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ.முவும் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியும் மக்கள் மத்தியில் சந்தேகங்களை உருவாக்கும் வகையில் மேற்கொண்டு வருகின்ற பிரசாரங்களை முறியடிப்பதற்காக, அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளில் ஒன்றாக இப்பிரசாரப் பணி அமைய விருப்பதாக பிரதமரின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# கழிவு அகற்றும் லொறியிலேறி தமிழ்ப் பெண்கைதி தப்பினார்

(நீர்கொழும்பு)

பெண் கைதியொருவர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து கழிவகற்றும் லொறி மூலம் தப்பித்துள்ளார். பிரஸ்தா பப் பெண் கடந்த வருடம் 50 கிராம் ஹெரோயின் போதைப் பொருட்களை வைத்திருந்ததனால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தியர் ஒருவரைத் திருமணம் புரிந்த சந்திரிகா சசிகரன் என்ற மேற்படிப் பெண், வெற்றுப் பீப்பாய்க்குள் மறைந்திருந்து, அதனை கழிவகற்றும் லொறியின் மூலம் அகற்றியபோது அதிலிருந்து தப்பித் துக் கொண்டுள்ளார்.

இதனால் இரண்டு பெண் சிறைக்காவலர்கள் பணியில் இருந்த இடைநிறுத்தப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளில் நீர்கொழும்பு பொலிஸார் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஊடகவியலாளர் பெயர் பதிவு சர்வதேச அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

ஒவ்வொரு பிரதேச ரீதியாகவும் அப்பகுதியிலுள்ள ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்களைத் திரட்டுமாறு பொலிஸ்மா அதிபர் விடுத்த உத்தரவு, ஊடகவியலாளர்களின் சுதந்திரத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என "மீடியா வோட்ச் டோக்"(Media Watchdog) எனும் சர்வதேச ஊடகவியலாளர் அமைப்பு கண்டித்துள்ளது.

இதேவேளை, பொலிசார் இவ்விதம் தகவல்களைத் திரட்டுவதென்பது ஊடகவியலாளர் மீதான சாதாரண பிரஜைக்கான தனிப்பட்ட உரிமைகளை மீறும் செயலென்று சமூக ஜனநாயகத்துக்கான இயக் கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

பொலிசார் இவ்விதம் விபரங்களைத் திரட்டி, பழிவாங்கும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படலாம் எனவும் அரசியல்வாதிகள் தமக்குப் பிடிக்காத ஊடகவியலாளர்களைத் தாக்குவதற்கு இந்த விபரங்களைப் பயன்படுத்தலாம் எனவும் இக்குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக இந்த உத்தரவை மீளப்பெறுமாறும் சமூக ஜனநாயகத்துக்கான இயக்கம் பொலிஸ் மா அதிபரைக் கோரியுள்ளது.

ஊடகவியலாளர்களுக்குரிய உரிமைகள் அரசியல் சட்டத்தின் விதிகளுக்கமைய காப்பாற்றப் பட்டுள்ளதால், பொலிஸ் மா அதிபர் இந்த உத்தரவை மீளப்பெறாவிடின், தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், சமூக ஜனநாயகத்துக்கான இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(க,ச)

### வடக்கில்...

ளைத் தயாரிப்பது பற்றி எமது அடுத்த கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது. அனேகமாக இக்கூட்டம் அடுத்த மாதம் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இன்றைய கூட்டம் மிகவும் நல்ல முறையில் புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புடனும் நிறைவடைந்தமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சர்வதேச...

ளவில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதேவேளை - உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளை ஜனவரி 21 ஆம் திகதி சந்திக்கவும், வடக்கு - கிழக்கில் எதிர் நோக்கப்படும் தேவைகள் குறித்துக் கலந்துரையாடவும் கிளிநொச்சியில் நடந்த பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### சுபைர்தீன் நீக்கம்

கிழக்கு அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சின் பொறுப்பில் உள்ள இலங்கை புனர்வாழ்வு அதிகார சபையின் தலைமைப் பொறுப்பிலிருந்து எஸ். சுபைர்தீன் நீக்கப்பட்டுள்ளார்.

இன்று அதிகார சபையின் புதிய தலைவர் தெரிவு செய்யப் படுவர். இந்த நிகழ்வில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொள்ள வுள்ளார்.

### லொறி புரண்டதில்...

வாகனப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்தன. வீதியின் இருமருங்கிலும் நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்துநின்றன. புதையுண்ட வாகனத்தை மீட்கும் முயற்சிகள் மாலையிலும் தொடர்ந்தும் நடைபெற்றன.

### அடிப்படை...

நிறைவேற்ற வேண்டியிருக்கும். எனவே,உறுதியுடனும் ஈடுபாட்டுடனும் கடமையாற்றக் கூடிய ஆளணியினர் தேவையாகவிருக்கும்.

மேலும், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அனைத்துச் செயற்திட்டங்கள் தொடர்பாக இச் செயலகத்துடன் கூடிக் கலந்தாலோசித்துச் செய்வதன்மூலம் இரட்டைத்தன்மையை இல்லாமல் செய்யலாம். எதிர்காலத்தில் எந்தெந்தப்பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதென்று மேற்படி குழு ஆராய்ந்து முடிவெடுக்கும். மீள் குடியேற்றத்துடன் தொடர்புடைய, சார்ந்திருக்கின்ற வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்ற செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

தற்போது அமைக்கப்பட்டிருக்கும் செயலகத்தின் கட்டமைப்புத் தன்மையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்திய பின்னர், மேலும் பல உதவிகள் தொடர்ந்து கிடைக் கவிருக்கின்றன.

இச்செயலகத்திற்குக் கிடைக்க இருக்கின்ற அனைத்து நிதியும் ஓர் சர்வதேச நிறுவனத்தின் பாதுகாப்பிலிருக்கும். இதற்கான நிறுவனம் எது என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றோம். நாம் திட்டங்களை மேற்கொள்ளும்போது, அதற்குத் தேவையான நிதியை அங்கிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். செயற்திட்டங்களைக் கண்காணிப்பதற்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப் பட்ட சர்வதேச அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்றும் இரேனியஸ் செல்வின் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

## புனர்வாழ்வுப் பணிகள்...

இவ்விரு நாட்களும செயலணியின் நிர்வாக கட்டமைப்புக்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப் பட்டதென்றும், வட-கிழக்கிலுள்ள அனைத்து மக்களுக்குமாகவே இந்தச் செயலகம் செயற்பட இருக்கின்றது என்றும் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

வட-கிழக்கிலுள்ள அனைத்துத் தமிழ் முஸ்லிம் மக்களும் கடந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அனைவருக்குமான புனர்வாழ்வுத் திட்டங்களை இச் செயலகம் மேற்கொள்ளும்.

வட-கிழக்குப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதியம் ஒன்று உருவாக்கப் படவிருக்கின்றது. இந்நிதியம் ஏதாவதொரு சர்வதேச நிறுவனம் ஒன்றின் பொறுப்பிலிருக்கும். இந்நிதியத்தினூடாக மேற்படி நடவடிக்கைகளுக்காக நிதி வழங்கப்படவிருக்கின்றது.

ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வட-கிழக்கிற்கான நிதியுதவிகள் குறித்து பல நாடுகளிடமிருந்து வாக்குறுதிகள் கிடைத்துள்ளன. இதைவிட, விரைவில் ஜப்பானில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. இதிலும் பல நாடுகள் உதவி வழங்க முன்வந்துள்ளன.

மேலும், வட-கிழக்கின் ஒவ்வொரு மாவட்டங்கள்தோறும் ஒவ்வொரு குழு அமைக்கப்படவுள்ளது. இக்குழுவில் விடுதலைப்புலிகள் தரப்பில் இரு பிரதிநிதிகளும் மற்றும் குறிப்பிட்ட மாவட்டத்தின் அரசாங்க அதிபரும் மேலுமொருவர் நியமிக்கப்படுவர். இந்த நான்கு பேர் கொண்ட குழுக்கள் ஒவ் வொரு மாவட்டத்திலும் செயற்படும. இந்தக்குழு குறிப்பிட்ட மாவட்டத்திலுள்ள தேவைகளை இனங்கண்டு இச் செயலகத்திற்கு அறிக்கை சம்ர்ப்பிக்கும். இதனடிப்படையில் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

தற்போதைய நிலையில் அவசர செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. ஏனெனில் யுத்தம் காரணமாக ஆயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். வட-கிழக்கின் அனைத்து கட்டுமானங்களும் சிதைவடைந்துள்ளன. எனவே, மக்களுக்கான அவசர புனர்வாழ்வுப்பணிகளே அவசியமாகும். இதற்காக அவசர-குறுகிய காலத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இச் செயலகத்தின் அடுத்த கட்டம், மேற்படி செயற்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான பாதையை நோக்கியதாக விருக்கும் என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார்.

(க,லி)

# சர்வதேச நிதி அமைப்புகளுக்கு கிளிநொச்சி கூட்டத்தில் பாராட்டு

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடைபெறவுள்ள - உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கான - தேவைகள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டு வரும் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.வின் அபிவிருத்தி திட்டம் (யு.என்.டி.பி) ஆசிய சர்வதேச நிறுவனங்களுக்கு கிளிநொச்சியில் பாராட்டுத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நடைபெற்ற வட-கிழக்கிலுள்ள உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுக் கூட்டத்தில் இப்பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - கிளிநொச்சி யில் தொலைப்பேசி பரிவர்த்தனை நிலையம் ஒன்றை அமைத்து வரும் - ரெலிகொம் நிறுவனத்தின ரும் நேற்றைய கூட்டத்தில் பாராட்டப்பட்டனர்.

# சமாதானப் பேச்சுக்களினை மாலைதீவில் நடத்த அழைப்பு

## அந்நாட்டு ஜனாதிபதி பிரதமர் ரணிலிடம் தெரிவிப்பு



ரணில் - கயூம் சந்திப்பு

(மாலே)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை தனது நாட்டிலும் நடாத்த மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் விருப்பம் தெரிவித்துள்ளார். இரண்டு நாள் விஜயமாக மாலைதீவு சென்ற பிரதமர் ரணிலிடம், ஜனாதிபதி கயூம் தனது இந்த விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார். சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெறவும் கயூம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரலில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலங்கை வர வழிசமைத்துக் கொடுத்து, சமாதானப் பேச்சுக்கு முதல் அடியை எடுத்துக் கொடுத்தமைக்காக, இலங்கையின் நன்றியை பிரதமர் ரணில் - மாலைதீவு ஜனாதிபதியிடம் தெரிவித்துக் கொண் டார்.

# டெக் வாடகைக்கு எடுத்து தந்திரமாக நடந்த திருட்டு

ஈச்சமோட்டைப் பகுதியில் உள்ள வீடியோக் கடையில் தந்திரமான முறையில் டெக் ஒன்று இவ்வார முற்பகுதியில் திருட்டுப் போயுள்ளது.

மேற்படி கடைக்கு வந்த நபர் ஒருவர் தனக்கு டெக் வாடகைக்கு வேண்டுமெனக் கூறி, கடை உரிமையாளருக்குத் தெரிந்த ஒரு நபரின் முகவரியைக் கொடுத்து விட்டு பெற்றுச் சென்றாராம்.

இரண்டு தினங்களின் பின்னரும் டெக் மீள ஒப்படைக்கப்படாத நிலையில், குறிப்பிட்ட நபர் அளித்த முகவரியை அணுகிய போது, அவரது முகவரிக்கும் அந்த நபருக்கும் தொடர்பு இல்லையெனத் தெரிந்தது. அப்போதுதான் டெக் திருட டுப் போனதை உரிமையாளர் அறிந்து கொண்டார்.

(58

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.44 | 96.88 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.75 | 154.28 |
| 1 யூரோ | 98.09 | 99.27 |
| 1 சுவிஸ் பிராங் | 66.29 | 67.32 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 54.16 | 55.15 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

லாலாவின்
இலவச விளம்பர பத்திரிகைச் சேவை
நமது ஈழமண்ணில் எவரும் இது வரை மேற்கொள்ளாத, முதன் முதலில் வெளிவரும் பத்திரிகை இது மட்டுமே.
உரிமையாளர்
லாலா சோப்
அச்சுவேலி. (சி-320)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.